




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 148 09.01.2026 வெள்ளிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 148 Friday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(09-01-2026)
விசுவாவசு ஆண்டு, மார்கழி -25
பிறை: தேய்பிறை
திதி
சஷ்டி காலை 11.23 வரை
பிறகு சப்தமி
நட்சத்திரம்:
உத்திரம் இரவு 06.06 வரை
பிறகு அஸ்தம்
யோகம்
சித்த/அமிர்த யோகம்
ராகுகாலம்
காலை 10.30 – 12.00 மணி
எமகண்டம்
பிற்பகல் 3.00–4.30 மணி
சூலம் – மேற்கு
நல்ல நேரம் :
காலை 6–7 மணி
மாலை 5–6 மணி

மேஷம் ...................... உற்சாகம்
ரிஷபம் ...................... வரவு
மிதுனம் ...................... ஆர்வம்
கடகம் ...................... வெற்றி
சிம்மம் ...................... ஆதரவு
கன்னி ...................... பக்தி
துலாம் ...................... நன்மை
விருச்சிகம் ...................... சாந்தம்
தனுசு ...................... பரிசு
மகரம் ...................... உழைப்பு
கும்பம் ...................... பெருமை
மீனம் ...................... கடமை

# பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3 ஆயிரம் வழங்கும் பணி

## மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



**சென்னை,ஜன.9:**

தமிழர் பண்டிகையாம் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாட தமிழக அரசு சார்பில் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 730 அரிசி ரேஷன் அட்டைதாரர்களுக்கும், இலங்கை தமிழர் குடும்பங்களுக்கும், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு பொருட்களுடன் தலா ரூ.3 ஆயிரம் ரொக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் பொங்கல் பரிசு தொகுப்பு வினியோகத்தை சென்னை ஆலந்தூர், நசரத்புரத்தில் உள்ள ரேஷன் கடையில் தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (வியாழக்கிழமை) தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் அமைச்சர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளநிலையில், இன்றைய தினமே அனைத்து ரேஷன் கடைகளிலும் பொதுமக்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தின் அடிப்படையில் பரிசுத் தொகுப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பொங்கல் பரிசு தொகுப்பு வினியோகத்திற்கான முன்னேற்பாடுநடவடிக்கைகளை கூட்டுறவுத்துறை அதிகாரிகள், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, தமிழகம் முழுவதும் உள்ள ரேஷன்கடைகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்புக்கான அரிசி மற்றும் சர்க்கரை 100 சதவீதம் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், கடந்த ஆண்டுகளில் பொங்கல் பண்டிகைக்கு வினியோகிக்கப்பட்ட வேட்டி-சேலைகளில் 80 சதவீதம் மட்டுமே மக்களால் நுகர்வு செய்யப்பட்டு உள்ளதாகவும், அந்த வகையில் கடந்த ஆண்டுகளில் நுகர்வு செய்யப்பட்ட வேட்டி-சேலைகளில் 100 சதவீதம் அனைத்து ரேஷன் கடைகளுக்கும் நுகர்வு செய்யப்பட்டு உள்ளதாகவும், எஞ்சிய வேட்டி-சேலைகள் குடோன்களில் இருப்பு இருப்பதாகவும் தேவைப்படும் ரேஷன் கடைகளுக்கு உடனடியாக வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

அதேபோன்று, முழு கரும்பை பொறுத்தவரையில் ஒவ்வொரு ரேஷன் கடைக்கும் 50 முதல் 80 சதவீதம் கரும்புகள் நகர்வு செய்யப்பட்டு உள்ளதாகவும், கரும்பை பசுமையாக வழங்கும் நோக்கத்தில் இது போன்று வினியோகம் செய்யப்படுவதாகவும், தொடர்ந்து தேவையான அளவு கரும்புகள் மாவட்ட நிர்வாக குழுக்களால் சம்பந்தப்பட்ட ரேஷன் கடைகளுக்கு பசுமையாகவே வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒரே வளாகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட ரேஷன் கடைகள் இருக்கும் பகுதிக்கு போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளதாகவும், ரூ.3 ஆயிரம் ரொக்கத் தொகையை பயனாளிகள் முன்பு எண்ணி வெளிப்படையாக வழங்க வேண்டும் என்றும், பொங்கல் பண்டிகை வரை ரேஷன் கடை ஊழியர்கள் விடுப்பு எடுக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மலைவாழ் பகுதி மக்கள் அதிகாலையிலேயே வேலைக்கு கிளம்புவதால், மலைவாழ் மக்கள் வசிக்கும் இடங்களில் உள்ள ரேஷன் கடைகள் காலை 6 மணிக்கே திறக்கப்படும் என்றும், பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் ரொக்கப்பணம் வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொங்கல் பரிசு தொகுப்பு வினியோகத்திற்கான டோக்கன் வழங்கும் பணி நேற்றுடன் நிறைவடைந்துள்ளது. டோக்கன் இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் சம்பந்தப்பட்ட ரேஷன் கடை ஊழியர்களை அணுகி பொங்கல் பரிசு தொகுப்புகளை அவர்கள் குறிப்பிடும் நாட்களில் வந்து பெற்றுக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பொங்கலை முன்னிட்டு கூடுதலாக 5 சிறப்பு ரயில்கள் அறிவிப்பு

## திருநெல்வேலி, தூத்துக்குடிக்கு இயக்கம்

**சென்னை,ஜன.9:**

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பயணிகள் வசதிக்காக கூடுதலாக 5 சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தாம்பரம் - திருநெல்வேலி: திருநெல்வேலியில் இருந்து ஜன.13, 20 ஆகிய தேதிகளில் அதிகாலை 3.45 மணிக்கு அதிவிரைவு சிறப்பு ரயில் (06058) புறப்பட்டு, அதேநாள் மதியம் 2 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும்.

மறுமார்க்கமாக, தாம்பரத்தில் இருந்து ஜன.13, 20 ஆகிய தேதிகளில் பிற்பகல் 3 மணிக்கு சிறப்பு ரயில் (06057) புறப்பட்டு, மறுநாள் அதிகாலை 2 மணிக்கு திருநெல்வேலியை அடையும்.

திருநெல்வேலியில் இருந்து ஜன.14-ம் தேதி அதிகாலை 3.45 மணிக்கு சிறப்பு ரயில் (06154) புறப்பட்டு, அதேநாள் மதியம் 1.15 மணிக்கு செங்கல்பட்டை வந்தடையும். மறுமார்க்கமாக, செங்கல்பட்டில் இருந்து ஜன.14-ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு சிறப்பு ரயில் (06153) புறப்பட்டு, மறுநாள் அதிகாலை 2 மணிக்கு திருநெல்வேலியை அடையும்.



திருநெல்வேலியில் இருந்து ஜன.12, 19 ஆகிய தேதிகளில் அதிகாலை 12.30 மணிக்கு சிறப்பு ரயில் (06166) புறப்பட்டு, அதேநாள் மதியம் 1.30 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும். மறுமார்க்கமாக, தாம்பரத்தில் இருந்து ஜன.12, 19 ஆகிய தேதிகளில் மாலை 4.40 மணிக்கு சிறப்பு ரயில் (06165) புறப்பட்டு, மறுநாள் காலை 8 மணிக்கு திருநெல்வேலியைச் சென்றடையும்.

இந்த ரயில் தாம்பரத்தில் இருந்து விழுப்புரம், மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை வழியாக திருநெல்வேலி செல்கிறது.

சென்ட்ரல் - தூத்துக்குடி: சென்னை சென்ட்ரலில் இருந்து ஜன.12, 19 ஆகிய தேதிகளில் இரவு 11.50 மணிக்கு சிறப்பு ரயில் (06151) புறப்பட்டு, மறுநாள் பகல் 12.15 மணிக்கு தூத்துக்குடியை சென்றடையும்.

மறுமார்க்கமாக, தூத்துக்குடியில் இருந்து ஜன.13, 20 ஆகிய தேதிகளில் மாலை 5.50 மணிக்குப் புறப்பட்டு, மறுநாள் காலை 9.45 மணிக்கு சென்னை சென்ட்ரலை வந்தடையும். இந்த ரயில் சென்ட்ரலில் இருந்து புறப்பட்டு, அரக்கோணம், ஜோலார்பேட்டை, சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல், மதுரை, சாத்தூர் வழியாக தூத்துக்குடிக்கு செல்கிறது.

# தமிழகத்தில் பிரதமர் மோடி, ராகுல் காந்தி ஒரே நேரத்தில் பிரசாரம் செய்ய திட்டம்

**சென்னை,ஜன.9:** தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் அல்லது மே மாதம் நடைபெற கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. இந்த நிலையில் தேர்தலை முன்னிட்டு பல்வேறு கட்சிகளும் தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

கூட்டணி அமைப்பது, பிரசாரம் செய்வது, பேரணிகளை நடத்துவது, நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் ஆலோசனை என பல்வேறு வேலைகளில் ஈடுபட்டு உள்ளன.

ஆளும் தி.மு.க. ஓரணியாகவும், எதிர்க்கட்சியான அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டாக மற்றொரு அணியாகவும் உள்ளன. விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம், சீமானின் நாம் தமிழர் கட்சி ஆகியவையும் போட்டியில் உள்ளன. இதனால், தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவுகிறது.

இந்நிலையில், தமிழகத்தில் ஒரே நேரத்தில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள உள்ளனர்.

இதன்படி, வருகிற 28 மற்றும் 29 ஆகிய தேதிகளில் பிரதமர் மோடி மற்றும் ராகுல் காந்தி இருவரும் தமிழகத்தில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள உள்ளனர் என தகவல் வெளியாகி உள்ளது.

இதனையடுத்து, ஜனவரி 16-ந்தேதியில் இருந்து பிப்ரவரி 3-ந்தேதி வரை தமிழகத்தில் முகாமிட ராகுல் காந்தி திட்டமிட்டு உள்ளார் என கூறப்படுகிறது.

# முதல் கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு ஏப்ரல் 1-ந் தேதி தொடக்கம்

**புதுடெல்லி,ஜன.9:**

முதல்கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியான வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் கணக்கெடுக்கும் பணிகள் ஏப்ரல் 1-ந் தேதி தொடங்குவதாக மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டு உள்ளது.

இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு கடைசியாக 2011-ம் ஆண்டு நடத்தப்பட்டது.

பின்னர் 2021-ம் ஆண்டு கணக்கெடுப்பு, கொரோனா காரணமாக தள்ளி வைக்கப்பட்டது. இந்த கணக்கெடுப்பு அடுத்த ஆண்டு (2027) 2 கட்டங்களாக நடக்கிறது.

இதில் முதல்கட்ட கணக்கெடுப்பு இந்த ஆண்டே தொடங்குகிறது. அதன்படி வருகிற ஏப்ரல் 1-ந்தேதி முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை வீடுகளை பட்டியலிடுதல், வீடுகளை கணக்கெடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் முதல்முறையாக பொதுமக்களே தங்கள் பெயர்களை சேர்த்துக்கொள்ள முடியும். இதற்கான முறையான அறிவிப்புகளை மத்திய அரசு நேற்று வெளியிட்டது.


அதன்படி மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், '2027-ம் ஆண்டு இந்திய மக்கள் தொகைகணக்கெடுப்பின் வீட்டுப் பட்டியல் நடவடிக்கைகள் வருகிற ஏப்ரல் 1-ந்தேதி முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், அந்தந்த மாநிலமும் யூனியன் பிரதேசமும் குறிப்பிடும் 30 நாட்களுக்குள் நடைபெறும் என்று மத்திய அரசு இதன்மூலம் அறிவிக்கிறது' என குறிப்பிடப்பட்டு உள்ளது.

# மத்திய மந்திரி அமித்ஷாவுடன் எடப்பாடி பழனிசாமி சந்திப்பு

**புதுடெல்லி,ஜன.9:**

சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள அ.தி.மு.க. முழு வீச்சில் தயாராகி வருகிறது. பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அ.தி.மு.க. மீண்டும் இணைந்தது. கடந்த ஏப்ரல் மாதம் 11-ந் தேதி மத்திய மந்திரி அமித்ஷா முன்னிலையில் அ.தி.மு.க.-பா.ஜனதா கூட்டணி முடிவானது.

இதையடுத்து தமிழகத்தில் தொகுதி பங்கீடு மற்றும் கூட்டணி தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த மத்திய மந்திரி பியூஸ் கோயல் தலைமையிலான குழுவை பா.ஜனதா தேசிய தலைமை அமைத்தது. அந்த குழுவினர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.



இதனை தொடர்ந்து மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா 2 நாட்களுக்கு முன்பு தமிழ்நாட்டுக்கு வந்திருந்தார். அப்போது அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி திருச்சியில் அவரை சந்தித்து பேசினார். அப்போது அவரிடம் அமித்ஷா, கூட்டணியில் இடம்பெறும் கட்சிகளை 10 நாட்களுக்குள் இறுதி செய்யுமாறு கேட்டுக்கொண்டதாக கூறப்படுகிறது.

இந்த சூழ்நிலையில் அ.தி.மு.க. கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி நேற்று இணைந்தது. வரும் சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க.-பா.ம.க. இடையிலான தேர்தல் கூட்டணி உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து அடுத்தக்கட்ட நடவடிக்கையாக என்னவெல்லாம் செய்வது? என்பது பற்றி உள்துறை மந்திரி அமித்ஷாவுடன் ஆலோசிப்பதற்காக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று டெல்லி சென்றார்.

இந்த நிலையில் இரவு 10.15 மணியளவில் டெல்லி கிருஷ்ணமேனன் மார்க்கில் உள்ள மத்திய மந்திரி அமித்ஷாவின் இல்லத்துக்கு எடப்பாடி பழனிசாமி சென்றார். அங்கு அடுத்த சில நிமிடங்களில் அமித்ஷாவுடன் சந்திப்பு நடந்தது. கூட்டணி விவகாரங்கள், தொகுதி பங்கீடு விவகாரங்கள், இன்னும் கூட்டணியில் இடம்பெற வருகை தரும் கட்சிகள் பற்றிய விவரங்கள் பற்றி அவர்கள் பேசியுள்ளனர்.

மேலும் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் பல்வேறு துறைகளில் ரூ.4 லட்சம் கோடிக்கு ஊழல் நடந்ததாக கவர்னர் ஆர்.என். ரவியிடம் எடப்பாடி பழனிசாமி அளித்த அறிக்கை பற்றியும் அமித்ஷாவிடம் அவர் விரிவாக எடுத்துக்கூறியதாக கூறப்படுகிறது. இது தொடர்பான அடுத்த மேல் கட்ட நடவடிக்கைகள் பற்றி அவர்கள் ஆராய்ந்து உள்ளனர்.

# பிப்ரவரி 1-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மத்திய பட்ஜெட் தாக்கல் செய்ய நாடாளுமன்ற குழு பரிந்துரை

**புதுடெல்லி,ஜன.9:**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் ஜனவரி 28-ந்தேதி இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி உரையுடன் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய பட்ஜெட்டை பிப்ரவரி 1-ந்தேதி காலை 11 மணிக்கு தாக்கல் செய்யும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது.

ஆனால் இந்த ஆண்டு பிப்ரவரி 1-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை வருகிறது. விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை களில் அரசு அலுவலங்களும், பங்கு சந்தைகளும் மூடப்பட்டிருக்கும். அது மட்டுமின்றி அன்று குரு ரவிதாஸ் ஜெயந்தி தினமாகும். இதனால் இந்த ஆண்டு பிப்ரவரி



1-ந்தேதி பட்ஜெட் தாக்கல் ஆகுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதுகுறித்து நாடாளுமன்ற விவகாரங்களுக்கான மந்திரிசபை குழு கூட்டத்தில் இன்று ஆலோசிக்கப்பட்டது. பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், பிப்ரவரி 1-ந்தேதி மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்ய நாடாளுமன்ற குழு பரிந்துரை செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆண்டு மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்வதன் மூலம், நிதி மந்திரியாக இருந்த காலத்தில் தொடர்ச்சியாக 9 மத்திய பட்ஜெட்டுகளை தாக்கல் செய்த முதல் நிதி மந்திரி என்ற பெருமையை நிர்மலா சீதாராமன் பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மானாமதுரையில்

## தமிழக முதல்வர் வழங்கிய பொங்கல் தொகுப்பு பொருள்கள்

### நகராட்சி தலைவர் மாரியப்பன் கென்னடி வழங்கினார்



**மானாமதுரை, ஜன .09 :** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி பகுதியில் உள்ள ரேசன் கடைகளில் தமிழக முதல்வர் முக.ஸ்டாலின் வழங்கிய பொங்கல் தொகுப்பு பொருள்கள் மற்றும் ரூ3000 த்தை பயனாளிகளுக்கு மானாமதுரை நகராட்சி தலைவர் முன்னாள் எம்எல்ஏ மாரியப்பன் கென்னடி வழங்கினார். உடன் திமுக நகர் செயலாளர் பொன்னுசாமி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பரிசளிப்பு விழா



**இராமநாதபுரம், ஜன.09** இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பள்ளிவாசல் மேல்நிலைப்பள்ளியில் 10, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் தமிழக வனம் மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ், ராஜகண்ணப்பன் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

## விஜய்யை எதிர்கொண்டு மோடி உங்கள் '56 inch' மார்பு கூற்றை நிரூபியுங்கள் - காங்கிரஸ்



**சென்னை, ஜன.09:** விஜய் நடிப்பில் நாளை வெளியாக இருந்த படம் 'ஜன நாயகன்'. படத்திற்கு தணிக்கை சான்றிதழ் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் சான்றிதழ் வழங்குவதற்கு சென்சாருக்கு உத்தரவிட வேண்டும் எனவும் ஜனநாயகன் படத்தயாரிப்பு நிறுவனம் சென்னை ஐகோர்ட்டில் மனுதாக்கல் செய்தது.

மனுவை விசாரித்த கோர்ட் வழக்கு விசாரணையை நாளைக்கு தள்ளி வைத்தது. இதையடுத்து தயாரிப்பு நிறுவனமான கே.வி. என்.நிறுவனம் படத்தின் ரிலீஸ் தேதியை தள்ளி வைப்பதாக அறிவித்தது. இதனால் ரசிகர்கள் மட்டுமின்றி திரைப்பிரபலங்களுக்கும் ஏமாற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில், ஜனநாயகன் படத்திற்கு ஆதரவாக தமிழக காங்கிரஸ் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. அந்த பதிவில், "அன்புள்ள பிரதமர் மோடி அவர்களே, நடிகர் விஜய்யின் 'ஜன நாயகன்' திரைப்படத்தைச் சுற்றியுள்ள சர்ச்சை, அரசியல் அதிகாரத்தின் துஷ்பயோகம் குறித்த கவலைகளைத் தூண்டியுள்ளது. அரசியல் கருத்து வேறுபாடுகள் புரிந்துகொள்ளக்கூடியவை என்றாலும், ஒரு கலைஞனின் படைப்பை இலக்கு வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

அரசியல் ஆதாயங்களுக்காகத் திரைப்படங்களுக்குத் தணிக்கை செய்வதைத் தமிழ்நாட்டு மக்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். கலையும், பொழுதுபோக்கும் அரசியல் போர்களில் காய்களாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அதிகாரிகளுக்கு நீங்கள் கொடுக்கும் அழுத்தம் காரணமாக விஜய்-ன் திரைப்படம் தாமதங்களைச் சந்தித்து வருகிறது, இது தயாரிப்பாளர்களுக்கும், ரசிகர்களுக்கும் அநீதியானது. கலையிலிருந்து அரசியலை விலக்கி வைப்போம், படைப்புச் சுதந்திரத்தை மதிப்போம்.

மோடி அவர்களே, நடிகர் விஜய்யை அல்ல, அரசியல்வாதி விஜய்யை எதிர்கொண்டு உங்கள் 56 அங்குல மார்பு என்ற கூற்றை நிரூபியுங்கள். உங்கள் மிரட்டல் அரசியல் தமிழ்நாட்டில் பலிக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இம்மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் டபுள் டக்கர்




**சென்னை, ஜன.09:** போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காகவும், எரிபொருள் சேமிப்பை அதிகரிக்கவும் சென்னையில் டபுள் டக்கர் பஸ் இயக்கப்பட்டது. இந்த பஸ்களில் ஏறி சென்னை மாநகர சாலைகளின் இருபுறமும் உள்ள அழகை ரசித்தபடியே பயணம் செய்தவர்களின் அனுபவம் மறக்க முடியாத ஒன்றாகும்.

இந்த நிலையில், 18 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது மீண்டும் சென்னையில் டபுள் டக்கர் பஸ் இயக்கப்பட உள்ளது. குறிப்பாக சர்வதேச சுற்றுலா தலமான மாமல்லபுரத்தில் சுற்றுலா பயணிகளின் நன்மை கருதி இந்த பஸ் சேவை தொடங்கியது.

முதற்கட்டமாக சென்னை அடையாறில் இருந்து மாமல்லபுரத்திற்கு டபுள் டக்கர் பஸ் சேவை அறிமுகப்படுத்தப்பட உள்ளது. சிகப்பு நிறம் கொண்ட டபுள் டக்கர் பஸ் சோதனை ஓட்டம் சென்னை அடையாறில் இருந்து மாமல்லபுரம் வரை கிழக்கு கடற்கரை சாலை வழியாக நடந்தது.இந்நிலையில் அமெரிக்க வாழ் தமிழர்கள் இணைந்து தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்காகப் புதிய குளிர்சாதன வசதி கொண்ட டபுள் டக்கர் (இரட்டை அடுக்கு) பேருந்தை வழங்கியுள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அமெரிக்கப் பயணத்தின் போது விடுத்த வேண்டுகோளை ஏற்று, அங்குள்ள புலம்பெயர் தமிழர்கள் இந்தப் பேருந்துக்கான நிதியைத் திரட்டி வழங்கினர்.இந்த பேருந்து சேவைக்கு தயாராக உள்ளது. இதனால் இம்மாத இறுதிக்குள் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு டபுள் டெக்கர் பேருந்து வரும் என எதிர்பார்க்கபடுகிறது.

இந்தப் பேருந்து சென்னை நகரின் முக்கியச் சுற்றுலாத் தலங்களுக்குச் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்ல பயன்படுத்தப்படும்.

## ஆசிரியர்கள் மீது அடக்குமுறை- சமூக நீதி என்பதெல்லாம் வெறும் நாடகமா?- அண்ணாமலை



**சென்னை, ஜன.09:** முன்னாள் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழகத்தில் நேற்று இரண்டு ஆசிரியர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பகுதி நேர ஆசிரியர்கள், கடந்த 14 கல்வி ஆண்டுகளாக, மாதம் வெறும் ₹12,500 ஊதியத்தில், பணி நிரந்தரப்படுத்தப்படாமல் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர். இடைநிலை ஆசிரியர்கள், கடந்த 14 நாட்களாக, சம வேலைக்கு, சம ஊதியம் கோரி, தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திமுக தனது 2016 தேர்தல் அறிக்கையிலும், 2021 தேர்தல் அறிக்கையிலும் ஆசிரியர்களின் ஊதியச் சீரமைப்பு மற்றும் சம ஊதியம் குறித்து வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்து ஐந்து ஆண்டுகள் ஆகியும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும்எடுக்கவில்லை.

மாணவர்கள், தங்கள் பெற்றோர்களின் உழைப்பிலும், ஆசிரியப் பெருமக்கள் அக்கறையிலும் சாதனை செய்யும்போது, வெட்கமே இல்லாமல் திமுக ஸ்டிக்கர் ஒட்டிப் பெருமை பேசும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மாணவர்களை உருவாக்கும் ஆசிரியர்களின் வாழ்க்கை, பல ஆண்டுகளாகக் கேள்விக்குறியாய் இருப்பதை, தொடர்ந்து புறக்கணித்து வருகிறார்.

நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கும் ஆசிரியப் பெருமக்களுடன்பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காமல், அவர்களுக்கு ஊதியம் வழங்க மாட்டோம் என்று அச்சுறுத்துவது, முதலமைச்சர் மு.ஸ்டாலின் ஒப்புதலுடன் நடந்த ஒரு திட்டமிட்ட அடக்குமுறை மட்டுமே.

திமுக அரசு, கல்வியை மதிப்பதில்லை என்பதையே இது நிரூபிக்கிறது. சமத்துவம், சமூகநீதி என்றெல்லாம் வெறும் வாய்வார்த்தையில்நாடகமாடும் முதலமைச்சர், உண்மையில் ஆசிரியப் பெருமக்களுக்குக் கொடுப்பது அநீதியும் அச்சுறுத்தலும் தான்.

பகுதி நேர ஆசிரியர்களின் நீண்டகால வலி மற்றும் இடைநிலை ஆசிரியர்களின் தொடர் போராட்டம் ஆகியவை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, ஆசிரியப் பெருமக்களுக்குச் செய்துள்ள துரோகத்தையே காட்டுகிறது.

ஆசிரியர்களை அடக்கி, அச்சுறுத்தி, அவர்களின் உரிமைகளை நசுக்கும் திமுக அரசின் செயல்பாடுகள், தமிழகக் கல்வி வரலாற்றில் ஒரு கருப்புப் புள்ளி. ஆசிரியர்களை அடக்குமுறைக்கு உள்ளாக்குவது, தமிழக மாணவர்களின் எதிர்காலத்தையே படுகுழியில் தள்ளுவதற்குச் சமம்.

ஆசிரியர்களுக்கு மரியாதையும் பாதுகாப்பும் வழங்கும்போது மட்டுமே, சமூகம் முன்னேறும். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கும் ஆசிரியர்களை குற்றவாளிகளாக நடத்தும் திமுக அரசின் இந்த அடக்குமுறையையும், அத்துமீறலையும், தமிழக மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். விரைவில் இதற்கான பதிலும் திமுகவுக்குக் கிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தலைமைப்பண்பு இல்லாதவர் அன்புமணி - நான் அமைப்பதே பா.ம.க. கூட்டணி: ராமதாஸ்



**சென்னை, ஜன.09:** தில்லுமுல்லு காரணமாகவே பா.ம.க.வை விட்டு நீக்கினேன்.

அன்புமணி நிறுத்தும் வேட்பாளருக்கு மக்கள் யாரும் வாக்களிக்க மாட்டார்கள்.

அ.தி.மு.க.வுடன் அன்புமணி கூட்டணி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நிலையில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

*பா.ம.க.வை பொறுத்தவரை தனிமனிதன் ஆரம்பித்த கட்சி, இதற்கு யாரும் உரிமை கொண்டாட முடியாது.

* அன்புமணி செய்த தில்லுமுல்லு காரணமாகவே பா.ம.க.வை விட்டு நீக்கினேன்.

* கட்சியில் இருந்து நீக்கிய பின்னர் ஒரு கோஷ்டியை வைத்துக்கொண்டு இருக்கிறான். தமிழக அரசியலில் இதுபோன்று நடந்ததில்லை.

*கொஞ்சம்கூட தலைமைப் பண்பு இல்லாதவர் அன்புமணி, பா.ம.க.தொண்டர்கள் என்னுடன் தான் இருக்கிறார்கள்.

* அன்புமணி நிறுத்தும் வேட்பாளருக்கு மக்கள் யாரும் வாக்களிக்க மாட்டார்கள்.

* அன்புமணி செய்த துரோகத்தை கட்சிக்கு அப்பாற்பட்டவர்களும் பொதுமக்களும் புரிந்து கொண்டுள்ளனர்.

*அன்புமணி எனக்கு வேட்டு வைப்பார் என்று எனக்கு முன்னதாகவே தெரியாமல் போய்விட்டது.

*தந்தைக்கு துரோகம் செய்த கும்பலுக்காக வாக்களிக்க வேண்டும் என நினைத்து அன்புமணி தரப்புக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

*நான் அமைப்பதே பா.ம.க. கூட்டணி, அந்த கூட்டணியே சட்டசபை தேர்தலில் வெற்றி பெறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஆரணி நகரம் 8,9-வது வார்டு பகுதியில் பொங்கல் தொகுப்பு



**ஆரணி, ஜன.09** ஆரணி நகரம் 8,9-வது வார்டு பகுதியில் தமிழ்நாடு அரசு சார்பில் பொங்கல் தொகுப்பை முன்னாள் நகரமன்ற உறுப்பினர் அன்சர்பாஷா பொதுமக்களுக்கு ரூபாய் 3000 , கரும்பு அரசி சக்கரை வழங்கினார்.இதில் நகர மன்ற உறுப்பினர் இஷ்ரத்ஜெபின், வட்ட பிரதிநிதி லக்ஷ்மி ராஜசேகர் , வட்ட செயலாளர கருணாகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## போளூரில் திமுக நகர செயலாளர் கோ. தனசேகரன் தலைமையில் பொங்கல் தொகுப்பினை 1.2.3 கடையில் துவக்கி வைத்தார்





**போளூர், ஜன.09:** தமிழகம் முழுவதும் ரூபாய் 3000 ரொக்கம் பச்சரிசி சர்க்கரை கரும்பு ஆகியவை அடங்கிய பொங்கல் தொகுப்பினை தமிழக முதல்வர் நேற்று சென்னையில் தொடங்கி வைத்தார், அதனைத் தொடர்ந்து போளூரில் திமுக நகர செயலாளர் கோ. தனசேகரன் தலைமையில் பொங்கல் தொகுப்பினை 1.2.3 கடையில் துவக்கி வைத்தார் உடன் நகர மன்ற தலைவர் ராணி சண்முகம் சரவணன் கைசர் நகர மன்ற உறுப்பினர்கள் ரங்கதுரை பழனி சிவசங்கர் ரமேஷ் ஷயாத்பாஷா சாந்தி ஏழுமலை சிம்லா சுந்தர் மதிவாணன் பாரி கோதண்டம் ஏழுமலை கட்சி நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்

## பா.ஜ.க.வுடன் இணைந்து விஜய் நாடகம் ஆடுகிறாரா?- சபாநாயகர் அப்பாவு



**நெல்லை, ஜன.09:** நெல்லையில் சபாநாயகர் அப்பாவு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கரூரில் 41 பேர் இறந்த சம்பவத்திற்கு தமிழக அரசு விசாரணை ஆணையம் அமைத்த நிலையில், விசாரணைக்கு முன்பே நடிகர் விஜய் "நான் சென்னையில் தான் இருக்கிறேன். முடிந்தால் என்னை கைது செய்யுங்கள்" என வீரவசனம் பேசினார்.

தற்போது சி.பி.ஐ. 12-ந்தேதி ஆஜராக நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இந்த வசனத்தை இப்போது பயன்படுத்துவாரா? அல்லது பா.ஜ.க.வுடன் இணைந்து நாடகம் ஆடுகிறாரா? என்று தெரியவில்லை. உச்சநீதிமன்றம் வரை சென்று சி.பி.ஐ. விசாரணையை கேட்டாலே நியாயம் கிடைத்துவிடும் என்று நினைப்பது தவறு. ஆந்திராவில் ஒரு ரசிகர் இறந்ததற்கு ஒரு நடிகரே கைது செய்யப்பட்டார். தமிழக அரசு இந்த வழக்கு விசாரணையை தொடர்ந்து நடத்தி இருந்தால் சட்டம் தன் கடமையை செய்திருக்கும்.

மத்திய அரசு தான் திரைப்படங்களுக்கு தணிக்கை சான்றிதழ் வழங்குகிறது. அப்படியிருக்க, படம் வெளியாவதில் சிக்கல் இருப்பது போலவும், அதை தொண்டர்கள் மத்தியில் ஒரு கொதிநிலையை உருவாக்குவதற்காகவும் பா.ஜ.க.வும் விஜய்யும் இணைந்து செயல்படுவதாக தெரிகிறது.

நிதி மந்திரி நிர்மலா சீதாராமனுக்கும், பிரதமருக்கும் பொருளாதாரம் பற்றி எதுவும் தெரியாது என பா.ஜ.க.வை சேர்ந்த சுப்பிரமணிய சுவாமி பலமுறை கூறியும் அவர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. அதுபோன்று காங்கிரஸ் கட்சியில் பலர் கூட்டணி குறித்து பேசினாலும் தலைமை நல்ல முடிவு எடுப்பார்கள் என்றார்.

## 'தமிழ்நாடு உறுதியளிப்பு ஓய்வூதியத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும்' - டி.டி.வி தினகரன்!

ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் 10 சதவிகிதத் தொகையினை ரத்து செய்திட வேண்டும்

திமுகவின் தேர்தல் வாக்குறுதியான பழைய ஓய்வூதியத் திட்டத்தையே அமல்படுத்திட வேண்டும்

தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டிருக்கும் தமிழ்நாடு உறுதியளிப்பு ஓய்வூதியத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும் என அ.ம.மு.க தலைவர் டி.டி.வி தினகரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக தனது எக்ஸ் தளப்பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளதாவது;



"ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் 10 சதவிகிதத் தொகையினை ரத்து செய்திட வேண்டும், பணி ஓய்வின் போது 15 ஆண்டுகளுக்கான ஓய்வூதியத்தினை தொகுத்து வழங்க வேண்டும், பொது வருங்கால வைப்பு நிதித் தொகையின் அசலை வட்டியுடன் வழங்கிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கடிதம் எழுதியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழ்நாடு அரசால் அண்மையில்அறிவிக்கப்பட்டுள்ள உறுதியளிப்பு ஓய்வூதியத் திட்டத்தை, பழைய ஓய்வூதியத் திட்டத்துடன் ஒப்பிடும் சவலைக் குழந்தையாக இருப்பதாக விமர்சித்திருக்கும் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் தங்களின் பெரும்பாலான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் வேதனை தெரிவித்துள்ளனர்.

அதோடு, புதிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்பட்ட நாளில் தொடங்கி தற்போது வரை 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு பேராசிரியடமிருந்தும் பிடித்தம் செய்துள்ள சுமார் 1 கோடி ரூபாய் அளவிலான தொகையை திருப்பித் தரவில்லையெனில் மாபெரும் போராட்டம் நடத்தவும் தயங்க மாட்டோம் என தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகமும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே, பல்வேறு குறைபாடுகள் மற்றும் எதிர்ப்புகளிடையே தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டிருக்கும் தமிழ்நாடு உறுதியளிப்பு ஓய்வூதியத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றும் வகையில் திமுகவின் தேர்தல் வாக்குறுதியான பழைய ஓய்வூதியத் திட்டத்தையே அமல்படுத்திட வேண்டும் என தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PRGI. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
தமிழகம் மற்றும் புதுவையில் அனைத்து
தாலுகா-க்களிலும்
செய்தியாளர்கள் தேவை. பத்திரிகை
துறையில் ஆர்வமும் துடிப்பும்
உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
Call: 7789941009
eMail: paperboynewspaper@gmail.com
www.paperboy.biz


FLAT FOR SALE
PONMAR
STONE & ACRES
FLORA
2 BHK
INDEPENDENT
FLOOR - 1033 Sq.ft
99401 55588


NEWLY
CONSTRUCTED
A GRADE
INDUSTRIAL
WAREHOUSE
available on
Lease at TADA,
Near Sri City, A.P
Approx 1.15 lakh sq.ft.
Ample parking place for lorries and cars
Warehouse on main NH5 express high way having direct approach on high road
Close vicinity to 3 ports and Sri City
Construction as per "A" Grade warehouse norms
98402 97142


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..
www.arultharumdeivam.com
Manjal Mart
ORDER NOW
3 CALENDAR
RS.100
MANJALMART.COM
9337501889
7789941009


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


உடனடி விற்பனை
திருவள்ளூர் அடுத்த மணவாளநகர்
தேசிய நெடுஞ்சாலை
மெயின் ரோட்டில்
26,0000 Sq.ft
(காம்பவுண்ட் உள்ளது)
6000 Sq.ft பில்டிங்
DTCP APPROVED
98400 24841


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.


RG
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
999 ONLY


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


S.R
Call Drivers
Travels
Man Power & All Vehicle Available
24 Hours
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009



# கவிதை அரங்கம்!



அனைத்தையும்
இழந்தாலும்
நம்பிக்கையை இழக்காதே
அமாவாசை என்பது
தேய்பிறையின் முடிவு
தானே
ஒழிய நிலவின் முடிவல்ல


போராடும் மனிதர்களிடம்
தோல்வியும் ஒருநாள்
தோற்றுப் போகும்

இலக்கை அடைவதில்
மனம்
உறுதியாக இருந்தால்
அதை
அடையும் மார்க்கமும்
உங்களின்
முன் தெளிவாகத் தெரியும்

அனுபவம் அன்பாகச்
சொல்லித் தருவதில்லை

வெட்டவெட்ட முளைக்கும்
முயற்சி மட்டுமிருந்தால்
போதும் குட்டையாகிப்
போகும் அந்த ஆகாயமும்

# வாழ்க்கை தத்துவம்...



மனதில் பட்டதை
சொல்லுங்கள்
ஆனால்
அடுத்தவர் மனம்
பட்டுபோகும்படி
சொல்லாதீர்கள்

எதன் மீதும் ஆசைப்படுவதில்
தவறில்லை அதற்கு நீ
அடிமை ஆகாத வரை

பழக பழக பாலும்
புளிக்கும் என்பது
அன்பிற்கும் உரியதே

எதை சரியாக செய்தாலும்
குறை சொல்ல நாலு பேர்
இருப்பார்கள்

# அவசர புத்தி...

"மூன்று லட்சம் இருந்தா சென்றிங் போட்டு மூடி விடலாம்" என கொத்தனார் சொல்லவும் ரமேஷ் யோசித்தான்

மூன்று லட்சம் எப்படி புரட்டுவது சொந்தம் பந்தம் எல்லாம் ஒரு வேலை சாப்பாடு போடுவதற்கே யோசிப்பார்கள் மூன்று லட்சமா.... மயக்கம் போட்டு விடுவார்கள்

"மனைவியின் நகையை கேட்டு வாங்கி வங்கியில் வைத்து கொத்தனார் கேட்ட மூன்று லட்சத்தைக் கொடுத்து வேலை பார்க்கனும்" என எண்ணியபடி வீட்டிற்கு சென்றான் ரமேஷ்

"அத்தாட்சி மூனு லட்சம் பணம் இருந்தா கொடுங்களே... கட்டிய வீட்டை குறையா போடக் கூடாதாம்" என உறவுக்கார அண்ணன் மனைவிடம் கேட்க,
"ஏன்டி என்ன நக்கல இருக்கா இப்ப நா இருக்கிற நிலைமையில வட்டிக்கு பணமா கொடுத்து வாங்குறேன் போடி இவளே...'"எனச் சொல்லி விலகி கடைக்குச் சென்றாள் பாக்கியம்

"அத்தாட்சியும் கையை விரிச்சுட்டாங்க இருக்குற நகை நட்டை வச்சாவது குறைவேலையை முடிக்கச் சொல்லனும்" என மனதில் யோசனை செய்தபடி கட்டிட வாசல் ஓரமாக அமர்ந்து கொண்டு மகனை எதிர்ப் பார்த்துக் கொண்டு இருந்தாள் மரகதம்

அப்போது கொத்தனார் ஒரு குடம் தண்ணீ கொண்டு வாங்கம்மா.... என்று அழைக்கவும் மரகதம் குடத்தை குழாயில் தண்ணீர் பிடித்து கட்டிடத்திற்குள் சென்று கொடுத்தாள் கடைக்கு போன பாக்கியம் சேலைக்குள் மஞ்சப் பையை மறைத்து வைத்து கொண்டு வீட்டிற்குள் போனாள்

பால் வண்டி மணிச் சத்தம் கேட்கவும் வீட்டிற்குள் போன பாக்கியம் தூக்கு வாளியுடன் வேகமாக வந்தவள் தெருவில் இருபக்கமும் பார்த்தவள் கொஞ்சம் தூரத்தில் பால்க்காரன் பால் ஊற்றுவதைப் பார்த்ததும் அந்தப் பக்கமாக சென்றாள் பாக்கியம்

இரு சக்கர வாகனத்தில் ரமேஷ் வந்தவன் "அம்மா.... அம்மா...."என அழைக்க கட்டிடத்தில் இருந்து மகன் அழைப்புக் குரல் கேட்டு வந்தவள் அம்மா.. பொண்டாட்டி நகையை பேங்கில் வச்சு மூனு லட்சம் கேட்டேன் வட்டி , வரின்னு போக மிச்சம் கொடுத்தாங்க ன்னு சொல்ல

"மிச்சம்ன்னா எவ்வளவு "அம்மா கேட்டாள்

மூனு லட்சத்திற்கு ஐந்தாயிரம் கம்மியா இருக்கும் அஞ்சு, பத்து செலவுக்கு வச்சுகிட்டு கொத்தனாருட்ட கொடுக்கலாம் என்று சொல்லியவன் நா போயி டீ வாங்கிட்டு வந்துறேன்னு" இரு சக்கர வாகனத்தில் சென்றான்

பாக்கியத்தைப் பார்க்க வீடு வரைக்கும் சென்று பார்த்த மரகதம் அத்தாட்சி என அழைத்து பார்த்தாள் யாரும் இல்லாததைப் பார்த்து கட்டிடத்துக்கு திரும்பி வந்து உள்ளே சென்றாள் மரகதம்

மஞ்சப்பையுடன் கட்டிடத்துக்குள் மரகதம் சென்றதை கவனித்த பாக்கியம்
வீட்டிற்குள் வந்து பாலை அடிப்பின் மேல் வைத்து விட்டு பிரோவை திறந்து பார்த்தாள் பாக்கியம்

பட படன்னு வரவும் கொஞ்சம் ஆசுவாசப் படித்திக் கொண்டு நிதானமாய் பார்த்தாள் மஞ்சப் பையயோடு பணத்தைக் காணவில்லை

சற்று முன் மரகதம் மஞ்சப் பையோடு கட்டிடத்துக்குள் சென்றதைப் பார்த்த ஞாபகம் வந்தது
"
அடிப்பாவி நா எப்படியோ பணத்தோடு வந்ததைப் பார்த்து விட்டு பால் வாங்கப் போன சமயம் பார்த்து பிரோவுக்குள் வைத்த பணத்தை எடுத்துட்டு போய் இருக்காளே இவளுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இவள் சும்மா விடுவேன் திருட்டு முண்டே நீ வீடு கட்டறதுக்கு எவ வீட்டு பணத்தை திருடுவே "ன்னு மனசுக்குள் பொரிந்த வாறு வேகமாக மரகதம் கட்டிடத்திற்கு வந்தாள் பாக்கியம்

அப்போ "கொத்தனாரண்ணே முனு லட்சத்திற்கு பத்தாயிரம் கம்மியா இருக்கு வாங்கிட்டு சென்டரிங் போட்டிருங்கண்ணே" என்று சொல்லிக் கொண்டு இருந்ததை கேட்டு
"ஏண்டி திருட்டு நாயே யாரு விட்டு பணத்தை எடுத்துக் கொடுப்பே "ன்னு பாக்கியம் கத்தினாள்

"என்ன என்னாச்சு என்ன சொல்றிங்க" ன்னு எதுவும் தெரியாதவளாய் மரகதம் கேட்க

"அடியே, பசப்பி சும்மா தெரியாத மாதிரி நடிக்காதே டி" என்றாள் பாக்கியம்

"நா பால் வாங்க போன சமயமா பார்த்து பிரோவ்ல வச்சுட்டு வந்த பணத்தை எடுத்து வந்துட்டியே டி 'என்று கத்தவும்
தெருவில் உள்ளவர்கள் எல்லோரும் பாக்கியத்திற்கு சார்பாக பேசத் தொடங்கினார்கள்

"அத்தாட்சி அத்தாட்சி கொளஞ்சு கொளஞ்சு பேசிட்டு வீட்டுக்குள்ளே போயி பிரோவ்ல இருந்த பணத்தை திருடிக் கிட்டு வந்திருப்பே,நலல வேல உடனே பார்த்திட்டே பாக்கியம் பேசாமா போலீஸ் கிட்டே சொல்லி நாலு சாத்து சாத்தச் சொல்லு "என சொல்லவும்

"மரகதம் ஏண்டி சிருக்கிகளா நா பணத்தை எடுத்தத நீங்க பார்த்த மாதிரி பேசுறிங்க அத்தாட்சி தா எங்கோ மறந்து வச்சுட்டு இங்கே வந்து புலம்புது அத்தாட்சி நல்ல வீட்ல தேடுங்க" ன்னு மரகதம் சொல்ல

"இல்லே பிரோவ்ல வச்ச மஞ்சப்பைய இல்லே நீ? தாண்டி எடுத்துட்டு வந்துருக்கே
இப்பத்தான் டி பேங்க்ல போய் முனு லட்சம் எடுத்துட்டு வந்தேன்" பாக்கியம் சொல்லிக் கொண்டே

" மரகதம் என் கிட்டே விளையாடதே பேசம அந்த பணத்தை கொடுத்துரு" "என்றாள்
அத்தாட்சி இதுல முனு லட்சம் இல்லே பொண்டாட்டிட நகை வாங்கி பேங்க்ல போயி அடமானம் வச்சு வட்டி அஞ்சாயிரம் போக மிச்சம் பணம் தான் என்றாள் மரகதம் அடியே அதுக்கு அஞ்சாயிரத்த அமுக்கிட்டியா ன்னு சொல்லிக்கொண்டே அந்த பணத்தைக் கொடுடி" என்றாள்

அப்போது டீ வாங்கிக்கொண்டு வந்த ரமேஷ் கட்டிடத்தின் கூட்டத்தைப் பார்த்து உள்ளே வந்தவன் "என்னம்மா என்ன பிரச்சனை" என்று கேட்கவும்

"வாடா ரமேஷ் அத்தை விட்டு பணத்தை நா திருடிட்டேன்னு சொல்லி நீ கொடுத்துட்டு போன பணத்தை கேட்கிறாங்க டா" ன்னு சொல்லவும்

சட்டைப்பையில் இருந்த நகை அடமானச் சிட்டையை எடுத்து காண்பித்தான்

"இந்தா பாருங்க பேங்க்ல நகையை வச்சு பணம் வாங்கிட்டு வந்த ரசீது" என நீட்டவும்,

"அப்போ நா பீரோவுல வச்ச பணம் "எனச் சொல்லிக் கொண்டே பாக்கியம் வீட்டிற்கு போனாள்

பிரோவிலிருந்ததை எல்லாம் சேலைத் துணிகளை எல்லாம் உதறிப் பார்த்தாள்
"பணமுள்ள மஞ்சப்பை காணவில்லை எங்கே போச்சு எங்கே போச்சு "என பிதற்றத் தொடங்கினாள்

"அத்தே வீட்டுக்குள்ளதா வச்சுங்களா... "ன்னு சொல்லி கொண்டே பிரோ கதவை சாத்தியவன் பிரோ பக்கத்தில் ஆணியில் மாட்டி இருந்த பையை எடுத்து "இதுவா அத்தேன்"னு கேட்கவும்
ரமேஷிடமிருந்து மஞ்சப் பையை பிடிங்கி வேகமாக திறந்தாள் ஐநூறு ரூபாய் பணக்கட்டு பாக்கியத்தைப் பார்த்து ஈ......ன்னு இளிக்கவும் முகமலர்ந்தாள் பாக்கியம்

**நல.ஞானபண்டிதன்**

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*ஐந்து வயது மகன்:* அம்மா, ஐ லவ் யூ!

*அம்மா:* ஐ லவ் யூ டூ!

*இருபது வயது மகன்:* அம்மா, ஐ லவ் யூ!

*அம்மா:* என் கிட்ட காசு இல்லை. ஒழுங்கா கிளம்பு.



# தினம் ஒரு சமையல்



## புதினா சட்னி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1. புதினா | -ஒரு கைப்பிடி அளவு |
| 2. உளுத்தம்பருப்பு | -சிறிதளவு |
| 3. கடுகு | -சிறிதளவு |
| 4. கடலை பருப்பு | -சிறிதளவு |
| 5. வரமிளகாய் | - 3 |
| 6. வெங்காயம் | - 5 |
| 7. மல்லித்தழை | - சிறிதளவு |
| 8. புளி | -சிறிதளவு |
| 9. தேங்காய் | - 5 பல் |
| 10. உப்பு | -தேவைக்கேற்ப |

செய்முறை:



1. முதலில் புதினா இலையை நன்கு நீரில் அலசிக்கொள்ளவும்

2. வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு போட்டு பொரிந்தவுடன் உளுத்தம் பருப்பு மற்றும் கடலை பருப்பு போட்டு வதக்கவும். பின் வெங்காயம் சேர்த்து வதக்கவும். பிறகு வரமிளகாய் சேர்த்து வதங்கியவுடன் புதினா மற்றும் மல்லி இலை சேர்த்து நன்கு வதக்கவும். பிறகு புளி மாறட்டும் தேங்காய் சேர்த்து வதங்கியவுடன் இறக்கி ஆற வைத்து உப்பு சேர்த்து மிக்ஸியில் அரைக்கவும் .

# நீலகிரி தைலம் பயன்கள்



மலைப்பிரதேசங்களில் சிறப்பே மூலிகைகள் தான். அவற்றில் ஒன்று யூகலிப்டஸ் எண்ணெய். நீலகிரி தைலம். யூகலிப்டஸ் இலைகளில் உள்ள மருத்துவ குணங்களுக்காக அது பெரும் அளவில் பயன்படுத்தப்படுகிறது என்பது உண்மை தான். யூகலிப்டஸ் எண்ணெய் காய்ச்சல், ஜலதோஷம் போன்ற அறிகுறிகளில் இருந்து மட்டுமல்ல இன்னும் பல நன்மைகளை அளிக்கும். அது குறித்து இந்த கட்டுரையில் தெரிந்துகொள்வோம்.

யூகலிப்டஸ் ஆயில்

யூகலிப்டஸ் எண்ணெய். இதன் இலைகளை உலர்த்தி, நசுக்கி காய்ச்சி அதன் மூலம் இந்த எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. மேலும் இது நறுமணம் மிக்கது. இதன் பயன்பாடு புத்துணர்ச்சியை தரக்கூடியது. இது பொதுவாக தலைவலி மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால் தலைவலி மட்டுமல்லாது மற்ற சில உடல்நல பிரச்சனைகளையும் இவை குணப்படுத்த செய்கிறது. இது குறித்து சற்று விரிவாக பார்க்கலாம்.

இளம் வயதினர் அதிகமாக கவலைப்படும் விஷயங்களில் ஒன்று முகப்பரு. முகப்பரு பாதிப்புகள் சருமத்தில் நீர் சத்து குறைபாடு காரணமாகவும், முகத்தில் எண்ணெய் அதிக அளவில் படிவதன் காரணமாகவும் ஏற்படுகிறது. மேலும் சரும துளைகளில் எண்ணெய் பசை படிந்து துளைகள் மூடப்படுவதால் பாக்டீரியா தொற்று ஏற்படுகிறது. இதனால் முகப்பரு போன்ற பிரச்சனைகள் சருமத்தை பாதிக்கிறது.

வெந்நீரில் 5 சொட்டு யூகலிப்டஸ் எண்ணெயை சேர்த்து ஆவி பிடித்து வர முகப்பரு பாதிப்புகள் குறைய தொடங்கும்.

காற்றின் மூலம் பல நோய்த்தொற்றுக்கள் பரவுகிறது. இதனை சரி செய்ய யூகலிப்டஸ் எண்ணெய் உதவுகிறது என்று கூறினால் நம்ப முடியுமா? ஆமாம்! பெரும்பாலும் சளி, தும்மல் போன்ற பாதிப்புகள் காற்றில் உள்ள பூஞ்சை தொற்றுகளால் ஏற்படுகிறது. இந்த பூஞ்சை தொற்றுக்களை எதிர்க்கும் தன்மை யூகலிப்டஸ் எண்ணெய்க்கு இருக்கிறது. துணிகளை துவைக்கும் போது தண்ணீரில் சிறிதளவு யூகலிப்டஸ் எண்ணெயை சேர்த்து துவைக்கலாம். இது துணிகளுக்கு நறுமணத்தை கொடுப்பதோடு மட்டுமல்லாமல் சிறு பூச்சிகள் அழிவதற்கும் உதவுகிறது.

தலைவலி, சளி, தும்மல் போன்ற பாதிப்புகளை சரி செய்ய யூகலிப்டஸ் எண்ணெய் உதவுகிறது. தீவிர மூக்கடைப்பு இருக்கும் சமயத்தில் கொதிக்கும் நீரில் சிறிதளவு யூகலிப்டஸ் எண்ணெயை சேர்த்து ஆவி பிடித்து வர மூக்கடைப்பு குணமாகும். மார்பு சளி இருக்கும் சமயத்தில் மார்பு பகுதிகளில் இந்த எண்ணெயை தடவலாம். இது அறிகுறிகளை குறைக்க செய்யும்.

மூட்டு வலி உள்ளவர்களுக்கு பெரும்பாலும் இந்த யூகலிப்டஸ் எண்ணெய் கை கொடுக்கிறது. ஆய்வுகளில் யூகலிப்டஸ் எண்ணெயை பயன்படுத்தியவர்கள் வலியில் இருந்து விரைவாக நிவாரணம் பெறுகிறார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே மூட்டு வலி, முழங்கால் வலி போன்ற பாதிப்புகளுக்கும் யூகலிப்டஸ் எண்ணெயை பயன்படுத்தலாம்.

# அஜித் ரசிகர்களே தயாரா, பொங்கல் ஸ்பெஷலாக குட் பேட் அக்லி... எந்த தொலைக்காட்சி, எப்போது தெரியுமா?



தமிழ் சினிமாவில் ரஜினி-கமலுக்கு பிறகு முன்னணி நடிகர்களாக இருப்பவர்கள் தான் விஜய்-அஜித்.

ஒரு காலத்தில் இவர்களின் ரசிகர்களின் சண்டை தான் சமூக வலைதளங்களில் அதிகம் பேசப்பட்டு வந்தது, ஆனால் இப்போது அவரவர் நாயகனை கொண்டாடுவதை மட்டும் செய்து வருகிறார்கள்.

நாளை (ஜனவரி 9) தமிழ் சினிமா மிகவும் எதிர்ப்பார்த்த விஜய்யின் கடைசிப்படமான ஜனநாயகன் ரிலீஸ் ஆக இருந்தது, ஆனால் தணிக்கை குழ சான்றிதழ் கிடைக்காததால் படத்தின் ரிலீஸ் தள்ளிப்போனது.

படத்தை காணும் ஆர்வத்தில் ரசிகர்கள் படத்திற்கு டிக்கெட் புக்கிங் செய்ததில் ப்ரீ புக்கிங்கில் மட்டுமே ரூ. 65 கோடி வசூலித்திருந்ததாக கூறப்படுகிறது. இப்போது படம் ரிலீஸ் ஆகவில்லை, ரசிகர்களும் கடும் வருத்தத்தில் உள்ளனர்.

இந்த நேரத்தில் அஜித் ரசிகர்கள் கொண்டாடும் வகையில் ஒரு சூப்பரான தகவல் வந்துள்ளது. அதாவது கடந்த வருடம் வெளியாகி சூப்பர் டூப்பர் ஹிட்டடித்த குட் பேட் அக்லி படம் பொங்கலுக்கு தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக உள்ளதாம்.

சன் தொலைக்காட்சியில் வரும் ஜனவரி 15ம் தேதி பொங்கல் ஸ்பெஷலாக மாலை 6.30 மணிக்கு படம் ஒளிபரப்பாக இருக்கிறது. இந்த தகவல் அஜித் ரசிகர்களுக்கு சூப்பர் கொண்டாட்டத்தை கொடுத்துள்ளது.






நடிகை ஹேமா குமார் சமீபத்தில் துபாய்க்கு சென்று, அங்கு பாலை வனத்தில் எடுத்து கொண்ட புகை படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அந்த புகைப்படங்கள் தற்போது வைரலாகி வருகின்றன. இதோ அந்த புகைப்படங்கள்:

# தமிழ் சினிமாவே ஆபத்தில் இருக்கிறது.. விஜய்க்கு ஆதரவாக வந்த பிரபலங்களின் பதிவு



விஜய்யின் ஜனநாயகன் படத்தின் ரிலீஸ் தற்போது தேதி குறிப்பிடாமல் தள்ளிவைக்கப்பட்டு இருக்கிறது. படத்தின் சென்சார் சான்றிதழ் பெறுவதில் ஏற்பட்ட தாமதம், அதற்காக தொடரப்பட்ட நீதிமன்ற வழக்கிலும் தீர்ப்பு ஜனவரி 9ம் தேதி தான் வரும் என அறிவிக்கப்பட்டதால் தயாரிப்பாளர் வேறு வழியின்றி ரிலீஸ் தேதியை தள்ளி வைப்பதாக அறிவித்துள்ளார்.

இந்த சர்ச்சையால் விஜய் ரசிகர்கள் கடும் அதிர்ச்சியில் இருக்கிறார்கள். ஜனநாயகனுக்கு வந்திருக்கும் பிரச்சனை பற்றி பல பிரபலங்களும் பேசி இருக்கின்றனர்.

நடப்பதை எல்லாம் பார்க்கும்போது ஜனநாயகனுக்கு வந்திருக்கும் பிரச்சனை அது மிகப்பெரிய வெற்றி பெற ஒரு perfect stage செட் ஆகிறது போல இருக்கிறது என கூறி இருக்கிறார்.

Confident ஆ இருங்க. நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம் என சிபிராஜ் பதிவிட்டு இருக்கிறார்.

# பாத தரிசனத்தின் பலன் என்ன?

கோயிலுக்குச் சென்று கூட்டத்தில் நின்று கடவுளின் திருவுருவத்தைப் பார்க்கிறோம். கூட்டமில்லாத கோயில்களில் இறைவனின் ஒவ்வொரு அங்கங்களைக் கண்ணாரக் கண்டு இன்புற வாய்ப்பு இருக்கும். கோவிந்த நாம கோஷத்திற்கு இடையில் 'ஜருகண்டி' என்ற சத்தத்திற்கு முன், கும்பிடும் கூட்டம் நிறைந்த திருப்பதி போன்ற கோயில்களில் ½ நிமிடம்கூட நிம்மதியாகக் கும்பிட வாய்ப்பு சற்றுக் குறைவுதான். அப்படி இருக்கும் கோயில்களில் இறைவனின் எந்த உறுப்பை முதலில் பார்ப்பது என்றால், இறைவனின் பாதத்தைத்தான். எப்போதும் இறைவன் பாதத்திலிருந்து தொடங்கி, படிப்படியாக மேல்நோக்கிச் சென்று முடியில் முடிக்கவேண்டும். இலக்கியத்தில் அப்படி அடி முதல் முடி வரை வருணித்துப்பாடும் இலக்கிய வகைக்குப் "பாதாதி கேசம்" என்று பொருள். இறைவன் இந்த உலகைத் தாங்குகிறார். அந்த இறைவனையே தாங்குவது அவருடைய பாதங்கள். அதனால் பாதத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும். திருவள்ளுவரே கடவுள் வாழ்த்தில் இறைவனுடைய பாதத்தைத்தான்,"நல் தாள்", "மா அடி"," இறைவனடி" என்று பாதத்தை மட்டுமே பணிகிறார். இறைவனின் பாத கமலத்தைப் பற்றிக்கொண்டால், நம்முடைய பாதக மலம் அகலும் என்பார் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள். கடவுள்களில் ஒவ்வொரு கடவுள்களுக்கும் கைகளின் எண்ணிக்கையும் தலைகளின் எண்ணிக்கையும் மாறுபடும். ஆனால், பாதம் இரண்டு மட்டுமே இருக்கும்.நான்கு முகம்கொண்ட பிரம்மனுக்கு எட்டுக் கால்களும் ஐந்து முகம் கொண்ட சிவபெருமானுக்குப் பத்து கால்களும் ஆறு முகம் கொண்ட முருகப்பெருமானுக்குப் பன்னிரு கால்களும் இருப்பதில்லை. கடவுளுக்குக் கணக்குத் தெரியவில்லையா? என்று எண்ணவேண்டாம். கடவுளுக்குக் கருணை அதிகம். இதுதான் பற்றுக்கோடு என்று பற்றிக்கொள்ளும் பக்தர்களுக்கு இரண்டு கைகள் என்பதால் இரு கால்களுடன் அருள்கிறார். இறைவன் எல்லாவற்றையும் தருவார். அவரது பாதமோ இறைவனையே நமக்குத் தரும்.



ப.சரவணன்.



தினம் ஒரு தலைவர்கள்

# பூலித்தேவன் வரலாறு

பூலித்தேவன் (1715 1767), தமிழ்நாட்டின் தென்காசி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டம், நெல்கட்டும்செவலை ஆண்ட தமிழ் பாளையக்காரர் ஆவார். இந்திய விடுதலை வரலாற்றில் வெள்ளையனே வெளியேறு என முதன் முதலாக 1751 ஆம் ஆண்டில் வீர முழக்கமிட்டவர். இதனால் இந்தியாவின் முதல் விடுதலைப்போர் எனக் கருதப்படும் சிப்பாய்க்கலகத்திற்கும் (1857) முன்னோடியாகக் கருதப்படுகிறார்.

நெற்கட்டாஞ் செவ்வலுக்கு பெருமை என்ன?
நெருப்பாற்றைக் கடந்த பூலித்தேவனாலே

என்ற நாட்டுப்புற பாடலை கொண்டு இவரின் சிறப்பை அறியலாம்.

பூழி நாடு

பூழி நாடு என்பது பாண்டிய நாட்டில் அமைந்த அகநாடுகளுள் ஒன்று. சங்ககாலம் தொட்டே இருந்து பாண்டியர் ஆட்சியின் கீழ் வரும் இந்நாடு 1378ஆம் ஆண்டு சேர நாட்டில் இருந்த ஒரு பாண்டிய மன்னனால் வரகுண ராமன் சிந்தாமணி காத்தப்ப பூலித்தேவர் என்ற தளபதிக்குத் தானமாக வழங்கப்பட்டது. இவர் ஆப்பநாட்டுக் கொண்டையங்கோட்டை மறவர் வழியில் வந்தவராவார். ஆரம்ப காலத்தில் இதன் தலைநகரம் ஆவுடையாபுரம். நாயக்கர் காலத்தில் (152964) பாண்டி நாடு 72 பாளையங்களாக பிரிக்கப்பட்ட போது, பூழி நாட்டின் பகுதிகள் அதனுள் அடங்கின. அதன் பிறகு சில ஆண்டுகள் கழித்து அதன் தலைநகரம் நெற்கட்டாஞ்செவ்வலுக்கு மாற்றப்பட்டது. நாயக்கர் கால வீழ்ச்சியின் போது பாளையங்கள் சுயவுரிமை பெறத்தொடங்கின.வரகுண ராமன் சிந்தாமணி காத்தப்ப பூலித்தேவரின் வழிவந்த பத்தாம் தலைமுறை மன்னனே சித்திர புத்திரத்தேவர் என்றவர் ஆவார்.

பெயர்க் காரணம்

பூலித்தேவன், தன்பகுதியில் நிலத்தை அடமானம் பிடிக்கும் பண்ணையார்களுக்கோ அல்லது ஆதிக்கம் செலுத்தும் மேல் இடத்திற்கோ, மேல்வாரம் தன்மையிலோ, வரி என்ற பெயரிலோ, ஒரு மணி நெல்லைக் கூட யாருக்கும் கண்ணில் காட்டமாட்டாராம், இதன் காரணமாய் ஆவுடையாபுரம் நெற்கட்டுஞ்செவ்வல்[2] என்றாகியது.

பூலித்தேவர் ஆட்சி செய்து காலம் பாண்டியராட்சியின் முடிவும், நாயக்கராட்சியின் சரிவு காலமும் ஆகும். ஆற்காடு நவாப்பின் அத்துமீறல்கள் அதற்குள் ஆங்கிலேயரின் வருகை என்று பல தோற்றம் மறைவுகளைச் சந்தித்துக் கொண்டிருந்த காலம். இவ்வாறு பெரிய அளவில் நடக்கும் ஆட்சி மாற்றங்களால் சிறிய பாளையக்காரர்களுக்கு ஆபத்து என்பதை மன்னர் உணர்ந்தார். அதனால் அனைத்துப் பாளையக்காரர்களையும் ஒன்று கூட்டி அரசியலில் ஏற்படும் மாற்றங்களை பற்றித் தீவிரமாக விவாதித்து பாளையக்காரர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தினார்.

பூலித்தேவர் திட்டப்படி அனைத்து பாளையக்காரர்களும் நாயக்கராட்சிக்குக் கப்பம் கட்டுவதைத் தவிர்த்தனர். நாயக்கராட்சியும் வலுவிழந்து முகம்மதியர்கள் கையில் விழுந்தது. பின்னர் அது மகாராஷ்டிர அரசர்கள் கைகளுக்கு மாறி பின்னர் மீண்டும் முகம்மதியர் கைக்கு வந்தது.

ஆனால் ஆற்காடு நவாபுக்கும் மற்றோர் முகம்மதிய அரசனுக்கும் இடையில் ஏற்பட்ட பூசல் காரணமாக இரு பிரிவனரும் தனித்தனியே கப்பம் வசூல் செய்ய முனைந்தனர். இந்த இரு பிரிவினருக்கும் நடந்த குழப்பத்தைப் பயன்படுத்தி, பாளையக்காரர்கள் கப்பம் கட்டுவதை மொத்தமாக நிறுத்தினார்கள்.



இத்தகு சூழ்நிலையில் ஆற்காடு நவாபு ஆங்கிலேயர்களின் உதவியை நாடினான். இருவருக்கும் நடந்த ஒப்பந்தப்படி ஆற்காடு நவாபு வரிவசூலிக்கும் உரிமையை ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்தான். அன்றிலிருந்து ஆங்கிலேயர்கள் இந்திய மன்னர்களோடு நேரடியாகப் போரிட ஆரம்பித்தனர்.

பாளையக்காரர்கள் கப்பம் கட்டாததால் கர்னல் கீரான் தலைமையில் கும்பினிப் படைமற்றும் ஆற்காடு நவாபின் அண்ணன் மாபூஸ்கான் தலைமையில் நவாபு படைகளும், கான்சாகிப் தலைமையில் உள்நாட்டுச் சிப்பாய் படைகளும் 1755-ஆம் ஆண்டு பாளையக்காரர்களைத் தாக்குவதற்குப் புறபட்டது. பேச்சளவில் இருந்த பாளையக்காரர்களின் ஒற்றுமை போர் என்றவுடன் உடைந்தது.

மாபூஸ்கான், கர்னல் கீரானுக்குச் செய்தி அனுப்பி உடனே புறப்பட்டுவரச் செய்தான். இருவரும் சேர்ந்து பூலித்தேவரின் கோட்டையை முற்றுகையிட்டனர். ஆங்கிலேயர் வசம் வெடிமருந்துகளும், துப்பாக்கிகளும், பீரங்கிகளும் இருந்தன. இருந்தும் பூலித்தேவரின் கோட்டையில் ஒரு சிறு விரிசலைக் கூட ஏற்படுத்த முடியவில்லை. மாறாக அவர்களிடம் இருந்த தளவாடங்களும் உணவும் தீர்ந்தது. இந்த செய்தியைத் தன் ஒற்றர்கள் மூலம் கேள்விப்பட்ட மன்னர் உடனடியாக கோட்டையை விட்டு வெளியே வந்து ஆங்கிலப்படைகளைக் கொன்று குவித்து சின்னாபின்னமாக்கினார்.

ஆங்கிலேயருடனான முதல் போரில் பூலித்தேவர் வெற்றி பெற்றாலும் மறுபடியும் அவர்கள் தாக்குவார்கள் என்கிற காரணத்தினால் மீண்டும் பாளையகாரர்களை ஒன்றுபடுத்த பூலித்தேவர் முயற்சி செய்தார். ஆனால் அவருடைய எண்ணம் ஈடேறவில்லை. பல பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்களை எதிர்க்கத் துணிவின்றி தங்கள் அரசாட்சியே போதும் என்கின்ற சுயநலத்தோடு ஒதுங்கிவிட்டார்கள். பூலித்தேவரின் கூட்டணி முயற்சி ஆற்காடு நவாபுக்கும் ஆங்கிலேயர்க்கும் தெரியவந்தது. உடனே அவர்கள் மற்ற பாளையக் காரர்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்குப் பதவி ஆசையைக் காட்டி, தங்கள் வசப்படுத்தினார்கள்.

இதன் மூலம் சுதேசிப்படை என்கின்ற புதிய படையை உருவாக்கி அதை யூசுப்கான் என்பவனிடம் ஒப்படைத்தனர். இந்த யூசுப்கான் பிறப்பால் மருதநாயகம் என்ற தமிழன். பின்னர் நாளடைவில் மதம் மாறி ஆங்கிலேயர்களோடு துணை சேர்ந்து பின்னர் சுதேசிப் படைகளின் தலைவன் ஆன இவன், பதவி ஆசைக்காக, அன்னியராட்சியை எதிர்த்து முதல் குரல் கொடுத்த மாவீரன் பூலித்தேவரை கடுமையாக எதிர்த்தான்.

1755ஆம் ஆண்டு தொடங்கி 1767ஆம் ஆண்டு வரை பல போர்களைப் பூலித்தேவர் சந்திக்க நேர்ந்தது, பரப்பளவில் ஒரு சிறிய பாளையத்திற்கு மட்டுமே தலைவரானாலும் பூலித்தேவரால் ஆங்கிலேயர்களையும், கூலிப்படைகளையும் எதிர்த்துப் பன்னிரெண்டு ஆண்டுகள் போர் புரிய முடிந்தது.

1761ஆம் ஆண்டு கான்சாகிபுடன் இறுதியாக நடைபெற்ற போரில் பூலித்தேவரின் படைகள் யூசுப்கான் படைகளிடம் தோற்றன. பத்தாண்டுகளாக போராடியும் வெற்றி பெற இயலாத நிலையில் இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்ட பேய்வாய் பீரங்கிகளின் உதவியோடு பூலித்தேவரின் கோட்டையில் முதன் முதலாக உடைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதற்குப்பின் ஆங்கிலேயப் படை, தளவாடங்களோடு கோட்டைக்குள் புகுந்தது. இந்நிலையில் வேறு வழியின்றி எஞ்சிய படைகளோடு பூலித்தேவர் கடலாடிக்குத் தந்திரமாகத் தப்பிச் சென்றார். அவர் கோட்டையை விட்டு சென்றாலும் இரகசியமாக படைகளைத் திரட்டும் பணியில் ஈடுபட்டார். சில மாதங்களுக்குப் பின்னர் பூலித்தேவர் மீண்டும் கோட்டையைப் பிடித்து பாளையத்தைச் சீர்படுத்தினார்.

ஆனால் இதையறிந்த ஆங்கிலேயர் நெற்கட்டான் செவ்வல் பாளையத்தின் மன்னர் பூலித்தேவரைப் பிடிக்க ஒரு நாட்டையே வளைக்கக் கூடிய அளவுக்குப் பெரும் படையுடன் வந்தனர். 1767 மே மாதம் டொனால்டு காம்பெல் தலைமையில் மேஜர் பிளிண்ட், காப்டன் ஹார்பர் ஆகியோர் வாசுதேவ நல்லூர் கோட்டையைத் தாக்கினர். இத்தகைய பெரும்படையை எதிர்பார்க்காத நிலையிலும் பூலித்தேவர் நிலைத்து நின்று போரைத் தொடர்ந்தார். ஆனால் ஆங்கிலேயப் படை பீரங்கிகளின் முன் மன்னர் படையின் வாளும் வேலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. குண்டுகளால் கோட்டை சுவரில் ஏற்பட்ட ஓட்டையை வீரர்கள் களிமண்ணும் வைக்கோலும் வைத்து அடைத்தனர். அதுவும் முடியாத சூழ்நிலையில் தத்தம் உடல்களைக் கொண்டு ஓட்டையை அடைத்துக் காத்தனர். ஒருவாரம் நடந்த இந்த போரில் எதிர்பாராமல் அச்சமயம் பெய்த பலத்த மழையைப் பயன்படுத்தி மன்னர் தப்பிச்சென்று மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் மறைந்து கொண்டார்.[7] 1767 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தப் போரே மன்னரின் கடைசிப்போர்.

மறைவு

பூலித்தேவரின் மறைவு பற்றி இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. மன்னர் தப்பிச் சென்றாலும் அவர் உயிரை குறியாகக் கொண்ட ஆங்கிலேயர்கள் அவரைத் தீவிரமாகத் தேடினர். ஒரு சாரார் கருத்துப்படி ஆரணிக் கோட்டையின் தலைவன் அனந்த நாராயணன் என்பவனின் மாளிகைக்கு பூலித்தேவரை வரச் செய்து அங்கு கைது செய்யப்பட்டார் என்றும், பாளையங்கோட்டைக்குக் கொண்டு செல்லும் வழியில், சங்கரன் கோயிலின் இறைவனை வழிபட வேண்டும் என்று பூலித்தேவர் விரும்பியதாகவும், அதன்படி கும்பினியப் போர் வீரர்கள் புடைசூழச் சென்று இறைவனை வழிபட்டதாகவும், அப்போது பெரிய புகை மண்டலமும் சோதியும் கைவிலங்குகள் அறுந்து விழ சோதியில் கலந்தார் என்றும், பூலித்தேவன் சிவஞானத்துடன் ஐக்கியமானதால் "பூலிசிவஞானம்" ஆனார் என்றும் நாட்டுப்புறப் பாடல்கள் கூறுகின்றன. இன்றைக்கும் சங்கரன்கோவிலில் உள்ள சங்கர நாராயணன் கோவிலில் பூலித்தேவர் மறைந்த இடம் என்று ஒரு இடம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

மற்றொரு கருத்து பூலித்தேவர் ஆங்கிலேயரால் கைதுசெய்யப்பட்டு தூக்கிலிட்ட செய்தியை மக்கள் அறிந்தால் அவர்கள் கிளர்ச்சி செய்யக்கூடும் என்பதால் ஆங்கிலேயர் இதனை இரகசியமாகச் செய்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

அவரின் நினைவாக அவர் வாழ்ந்த இல்லம் தமிழ்நாட்டு அரசால் புதுப்பிக்கப்பட்டு அவரது நினைவு மாளிகையாக அமைக்கப்பட்டுள்ளது.

## தேர்தல்: காங்கிரஸ் கட்சியின் கண்காணிப்பாளர்கள் குழு அறிவிப்பு

**புதுடெல்லி, ஜன.9:**

நாட்டில் தமிழகம், புதுச்சேரி, அசாம், கேரளா மற்றும் மேற்கு வங்காளத்தில் நடப்பு ஆண்டில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு பல்வேறு கட்சிகளும் தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், சட்டசபை தேர்தலை முன்னிட்டு 5 மாநிலங்களுக்கான கண்காணிப்பாளர்கள் அடங்கிய குழுவினரை காங்கிரஸ் கட்சி அறிவித்து உள்ளது. இதன்படி, தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு முகுல் வாஸ்னிக், உத்தம் குமார் ரெட்டி மற்றும் காஜி முகமது நிஜாமுதீன் ஆகிய 3 பேரும், கேரளாவுக்கு சச்சின் பைலட், கே.ஜே. ஜார்ஜ், இம்ரான் பிரதாப்கார்ஹி மற்றும் கன்னையா குமார் ஆகிய 4 பேரும் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். இதேபோன்று அசாமுக்கு பூபேஷ் பாகல், டி.கே. சிவக்குமார் மற்றும் பந்து திர்கே ஆகிய 3 பேரும் மற்றும் மேற்கு வங்காளத்திற்கு சுதீப் ராய் பர்மன் மற்றும் ஷகீல் அகமது கான் ஆகிய 2 பேரும் நியமிக்கப்பட்டு உள்ளனர். இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருகிறது.

## ஜார்க்கண்டில் 2 நாள்களில் 13 பேரைக் கொன்ற காட்டு யானை!

**புதுடெல்லி, ஜன.9:**

மேற்கு சிங்பூம் மாவட்டத்தில், மதம் பிடித்த ஒற்றைக் காட்டு யானை, செவ்வாய்க்கிழமை (ஜன. 6) நோவாமுண்டி மற்றும் ஹட்கம்ஹாரியா காவல் நிலையங்களின் பகுதிகளுக்குள் நுழைந்ததாகக் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, அந்தக் காட்டு யானையின் தாக்குதலில் அப்பகுதியில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 4 பேர் உள்பட 6 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அந்தக் காட்டு யானை, கடந்த ஜன.5 ஆம் தேதி கோல்ஹான் பகுதியில் 7 பேரைக் கொன்றதாக, அதிகாரிகள் கூறியுள்ளனர். இத்துடன், அந்த யானையின் தாக்குதலில் இதுவரை 4 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதையடுத்து, அந்த யானையை மீண்டும் காட்டுக்குள் துரத்தும் நடவடிக்கைகளை மேற்கு வங்கத்தின் பங்குரா வனத்துறை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். மேலும், ஒற்றைக் காட்டு யானை மனிதர்களைத் தாக்கி வருவதால் அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் சட்டங்களை மீறும் இந்திய மாணவர்கள் நாடு கடத்தப்படலாம்: தூதரகம் எச்சரிக்கை

**புதுடில்லி, ஜன.9:**

அமெரிக்காவில் அதிபர் டிரம்பின் நிர்வாகம், மாணவர் விசா நடைமுறையில் பல்வேறு புதிய மாற்றங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந் நிலையில் அமெரிக்காவில் சட்டங்களை மீறும் மாணவர்களுக்கு முக்கிய எச்சரிக்கைகளை இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டு உள்ளது.

அதுபற்றிய விவரம் வருமாறு; அமெரிக்காவில் சட்டங்களை மாணவர்கள் மீறினால் மாணவர்கள் விசாக்களை ரத்து செய்வதற்கும், நாடு கடத்தப்படுவதற்கும், எதிர்கால பயணங்களை தொடர முடியாமல் நீண்ட கால தகுதி இழப்புக்கும் வழி வகுக்கும்.

நீங்கள் கைது செய்யப்பட்டாலோ அல்லது ஏதேனும் சட்டங்களை மீறி நடந்து கொண்டாலோ, கைது செய்யப்பட்டாலோ உங்கள் விசாக்கள் ரத்து செய்யப்படலாம். நாடு கடத்தப்படலாம். எனவே விதிகளை பின்பற்றுங்கள், உங்கள் பயணத்தை ஆபத்தில் கொண்டுபோய் விடாதீர்கள். அமெரிக்க விசா என்பது ஒரு சலுகையே, அது ஒரு உரிமை அல்ல. விசா வைத்திருப்பவர்கள் உள்ளூர் சட்டங்கள், விதிகளை பின்பற்ற வேண்டும், அதற்கு இணங்கி நடக்க வேண்டும்.

இவ்வாறு அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

## வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு விவகாரத்தில் பதில் அளிக்க சோனியாவுக்கு கூடுதல் அவகாசம்

**புதுடெல்லி, ஜன.9:**

இத்தாலியை பூர்விகமாகக் கொண்ட சோனியா காந்தி கடந்த 1983-ம் ஆண்டு ஏப்ரலில் இந்திய குடியுரிமையை பெற்றுள்ளார். ஆனால் அவரது பெயர் டெல்லி சட்டப் பேரவை தொகுதி வாக்காளர் பட்டியலில் கடந்த 1980-ம் ஆண்டே இடம்பெற்றுள்ளது. எனவே, போலி ஆவணங்களை சோனியா காந்தி அளித்திருக்கக் கூடும். அவர் மீது வழக்குப் பதிவு செய்யக்கோரி விகாஸ் திரிபாதி என்பவர் டெல்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவை டெல்லி சிறப்பு நீதிமன்ற நீதிபதி விஷால் நேற்று விசாரித்தார்.

அப்போது சோனியா சார்பில் ஆஜரான வழக்கறிஞர், பதில் மனு தாக்கல் செய்ய கூடுதல் அவகாசம் கோரினார். இதை ஏற்ற டெல்லி நீதிமன்றம் கூடுதல் அவகாசம் அளித்தது.

## காஷ்மீர்: ஜெய்ஷ்-இ-பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை

**கத்துவா, ஜன.9:**

ஜம்மு மற்றும் காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் கத்துவா மாவட்டத்தில் கஹோக் கிராமத்தில் பில்லவார் பகுதியில், காமத் நல்லா வன பகுதிக்குள் பயங்கரவாதிகள் பதுங்கி உள்ளனர் என கிடைத்த தகவலை அடுத்து, பாதுகாப்பு படையினர் அந்த பகுதிக்கு சென்றனர். அவர்களை கண்டதும் பயங்கரவாதிகள் துப்பாக்கிகளால் சுட தொடங்கினர். இதனால், வீரர்களும் பதிலுக்கு துப்பாக்கி சூடு நடத்தினர்.

இதனால், இரு தரப்புக்கும் இடையே மாலை 6 மணியளவில் கடுமையான துப்பாக்கி சண்டை நடந்து வருகிறது. அந்த பகுதியில் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற ஜெய்ஷ்-இ-பயங்கரவாதிகள் 3 பேர் பதுங்கியிருந்து பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதுபற்றிய தகவல் போலீசாருக்கு தெரிந்ததும் உஷாரானார்கள். கூடுதல் படையினர் குவிக்கப்பட்டு அவர்களை ஒழிக்கும் பணி தொடர்ந்து வருகிறது.

## நிலவுக்கு 2040-ம் ஆண்டுக்குள் இந்திய விண்வெளி வீரர்களை அனுப்ப திட்டம்: இஸ்ரோ முன்னாள் தலைவர்

**ஆமதாபாத்,ஜன.9:**



குஜராத்தின் ஆமதாபாத் நகரில் நடந்த 5-வது இந்திய வானியல் சமூக கருத்தரங்கு தொடக்க நிகழ்ச்சியில் இஸ்ரோ அமைப்பின் முன்னாள் தலைவர் கிரண் குமார் கலந்து கொண்டு பேசினார்.

அவர் கூறும்போது, தற்போது இருந்து 2040-ம் ஆண்டுக்குள் விண்வெளி செயல்பாடுகளில், முழு அளவிலான திட்டங்கள் நிறைய நடைபெற உள்ளன. 2040-ம் ஆண்டில் இந்திய விண்வெளி வீரர்களை நிலவில் தரையிறக்கி பாதுகாப்பாக திருப்பி கொண்டு வரவேண்டும் என்ற ஒரு திட்டம் உள்ளது.

2040-ம் ஆண்டுக்குள் விண்வெளி நிலையம் ஒன்றை கட்டமைக்கும் பணியிலும் இந்தியா ஈடுபட்டு வருகிறது என்றார். வருங்காலத்தில் சந்திரயானின் தொடர்ச்சியான திட்டங்கள் உடனடியாக செயல்படுத்தப்படும். ஜப்பானுடன் இணைந்து லேண்டர் மற்றும் ரோவர் பணிகள் நடந்து வருகின்றன.

விண்வெளியை உற்றுநோக்குவதிலும், அண்டவெளியை புரிந்து கொள்வதிலும் இந்தியா உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. இது, இந்தியாவின் விண்வெளி பயணத்தில் கல்வி நிலையங்கள், என்ஜினீயரிங் மையங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் கூட பங்காற்ற நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் என்றார்.

ராணுவ நோக்கங்களுக்காக அல்லாமல் சமூக பயன்பாட்டிற்காக விண்வெளி தொழில்நுட்ப கட்டமைப்பை உருவாக்கிய முதல் நாடு இந்தியா மட்டுமே என பெருமையுடன் கூறினார். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நாடு முழுவதிலும் இருந்து விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், கல்வியியலாளர்கள், இளம் ஆராய்ச்சியாளர்கள் என 150-க்கும் மேற்பட்டோர் வருகை தந்துள்ளனர்.

## பந்தளத்தில் இருந்து சபரிமலைக்கு.. 12-ந் தேதி புறப்படும் திருவாபரண ஊர்வலம்

**புதுடெல்லி, ஜன.9:**

மகரவிளக்கு பூஜை சபரிமலை அய்யப்பன் கோவிலில் வருகிற 14-ந் தேதி நடக்கிறது.

அன்றைய தினம் சாமி அய்யப்பனுக்கு பாரம்பரிய வழக்கப்படி திருவாபரணங்கள் அணிவிக்கப்பட்டு சிறப்பு தீபாராதனை நடைபெறும். அவ்வாறு அணிவிக்கப்படும் திருவாபரணங்கள் பந்தளம் அரண்மனையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மகரவிளக்கு பூஜையை முன்னிட்டு இந்த திருவாபரணங்கள் பந்தளம் ராஜ குடும்ப மூத்த பிரதிநிதி தலைமையில் ஊர்வலமாக சன்னிதானத்திற்கு எடுத்து செல்வது வழக்கம்.

அதன்படி இந்த ஆண்டு திருவாபரணங்கள் வருகிற 12-ந் தேதி பந்தளம் அரண்மனையில் இருந்து வலிய கோயிக்கல் சாஸ்தா கோவிலுக்கு எடுத்து செல்லப்படுகிறது. அன்றைய தினம் மதியம் சாஸ்தா கோவிலில் நடைபெறும் சிறப்பு பூஜைக்கு பிறகு திருவாபரணங்கள் 3 சந்தன பேழைகளில் சபரிமலை நோக்கி தலைச்சுமையாக ஊர்வலமாக புறப்படும்.

திருவாபரண ஊர்வலம் 12-ந் தேதி இரவு ஆயிரூர் புதியகாவு தேவி கோவிலிலும், 13-ந் தேதி லாகா வனத்துறை சத்திரத்திலும் தங்கும்.

திருவாபரணங்கள் 14-ந் தேதி அட்டத்தோடு வழியாக மதியம் பம்பை கணபதி கோவில் வந்து சேரும்.

தொடர்ந்து மாலை 6 மணிக்கு சன்னிதானத்திற்கு கொண்டு வரப்படும் திருவாபரணங்களுக்கு தேவஸ்தான மந்திரி வாசவன், திருவிதாங்கூர் தேவஸ்தான தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வரவேற்பு அளிப்பார்கள். தொடர்ந்து 18-ம் படி வழியாக எடுத்து செல்லப்பட்டு அய்யப்ப சாமிக்கு அணிவித்து மாலை 6.30 மணிக்கு சிறப்பு தீபாராதனை நடைபெறும்.

## வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணி: 6.5 கோடி பெயர்கள் நீக்கம்

**புதுடெல்லி, ஜன.9:**



பீகாரை தொடர்ந்து 2ம் கட்டமாக 9 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணி நடைபெற்றது. அதன்படி, தமிழ்நாடு, கேரளா, சத்தீஷ்கார், கோவா, குஜராத், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், உத்தரபிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய 9 மாநிலங்களிலும், அந்தமான் நிக்பார் தீவுகள், லட்சத்தீவுகள், புதுச்சேரி ஆகிய 3 மாநிலங்களிலும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தபணி நடைபெற்றது. கடந்த அக்டோபர் 27ம் தேதி தொடங்கிய இப்பணி சமீபத்தில் நிறைவடைந்தது.

இதையடுத்து, வரைவு வாக்காளர் பட்டியல் ஒவ்வொரு மாநிலமாக தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்தது. இதில், தமிழகத்தில் 97 லட்சத்து 37 ஆயிரம் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. அதேபோல், உத்தரபிரதேசத்தில் 2.89 கோடி வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன.

இந்நிலையில், 2ம் கட்டமாக 9 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணியில் வாக்காளர் பட்டியலில் இருந்து 6.5 கோடி பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிக்குமுன் 9 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 50.90 கோடியாக இருந்த நிலையில் அந்த எண்ணிக்கை தற்போது 44.40 கோடியாக குறைந்துள்ளது.

## விபத்தில் இறந்த பிச்சைக்காரர் பையில் இருந்த ரூ.4.5 லட்சம்.. போலீசார் எடுத்த முடிவு..?

**திருவனந்தபுரம், ஜன.9:**



கேரளாவில் ஆலப்புழை மாவட்ட சுற்று வட்டார பகுதிகளில் அனில்கிஷோர் என்பவர் பொதுமக்களிடம் இருந்து பிச்சை எடுத்து வந்தார். இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு சாலையோரம் நடந்து சென்றபோது அந்த வழியாக வந்த வாகனம் மோதியது. இதில் படுகாயமடைந்த அவரை பொதுமக்கள் மீட்டு சிகிச்சைக்காக ஆலப்புழை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர்.

விபத்தில் அனில் கிஷோருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்ததால் சிறப்பு சிகிச்சை அளிக்க வேண்டியிருந்தநிலையில், சிகிச்சையில் இருந்த அவர் யாருக்கும் தெரியாமல் மருத்துவமனையை விட்டு வெளியேறி தான் வழக்கமாக தங்கக்கூடிய இடத்துக்கு சென்று படுத்துக்கொண்டார். ஏற்கனவே விபத்தில் சிக்கிய நிலையில் சரியான சிகிச்சை பெறாததால் அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இதனையறிந்த போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று அனில் கிஷோரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதனிடையே அவர் தங்கி இருந்து இடத்தில் இருந்த அவரது உடமைகளை போலீசார் கைப்பற்றி சோதனை செய்தனர். அப்போது அங்கு இருந்த பைகளில் கட்டுக்கட்டாக பணம் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். அந்த பைகளில் மொத்தம் ரூ.4 லட்சத்து 52 ஆயிரத்து 207 இருந்தது. மேலும் 12 சவுதி நாட்டு ரியால் பண நோட்டுகள், பழைய 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் இருந்தன.

இதையடுத்து அனில் கிஷோர் மருத்துவமனையில் அனுமதித்த போது கொடுக்கப்பட்ட முகவரியின் அடிப்படையில் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களை போலீசார் தேடினர். ஆனால், யாரையும் தொடர்புகொள்ள முடியவில்லை. இதையடுத்து அவருடைய பைகளில் இருந்த பணத்தை கோர்ட்டில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக போலீசார் தெரிவித்தனர்.

## அரசு வேலை மோசடி: 6 மாநிலங்களில் அமலாக்கத்துறை சோதனை!

**புதுடெல்லி, ஜன.9:**



அமலாக்கத்துறையின் பாட்னா அலுவலகம் பிகார், மேற்கு வங்கம், கேரளம், தமிழ்நாடு, குஜராத் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சோதனைகளை நடத்தி வருகிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மோசடி ஆரம்பத்தில் ரயில்வே துறையின் பெயரில் கண்டறியப்பட்டது என்றும், ஆனால் விசாரணையில் இது வனத்துறை ஆர்ஆர்பி(ரயில்வே ஆள்சேர்ப்பு வாரியம்), இந்திய அஞ்சல் துறை, வருமான வரித்துறை, சில நீதிமன்றங்கள், பொதுப் பணித்துறை, பிகார் அரசு, தில்லி மேம்பாட்டு ஆணையம், ராஜஸ்தான் செயலகம் உள்பட 40-க்கும் மேற்பட்ட அரசு நிறுவனங்கள் மற்றும்துறைகளை உள்ளடக்கியது என்று கண்டறியப்பட்டதாகவும் அவர்கள் கூறினர். அரசு வேலை வாங்கித்தருவதாக அந்தக் கும்பல், அரசு இணையதளங்களைப் போலி9யாகப் பயன்படுத்தி, போலி மின்னஞ்சல் மூலம் மோசடியான பணி நியமனக் கடிதங்களை அனுப்பியுள்ளதை அமலாக்கத்துறை கண்டறிந்துள்ளது. வேலை தேடுபவர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காக அந்தக் கும்பல் ஆர்பிஎஃப், ரயில்வே டிடிஇ(பயணச்சீட்டு பரிசோதகர்) மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் போன்ற நிறுவனங்களில் மோசடியாகப் பணியமர்த்தப்பட்ட சில பாதிக்கப்பட்டவர்களுக்கு 2-3 மாதங்களுக்கு ஆரம்பச் சம்பளத்தையும் வழங்கியுள்ளது.

பிகாரில் உள்ள முசாபர்பூர் மற்றும் மோதிஹாரி, மேற்கு வங்கத்தில் கொல்கத்தா, கேரளாவில் எர்ணாகுளம், பந்தளம், அடூர் மற்றும் கோடூர், சென்னையில் (தமிழ்நாடு), ராஜ்கோட் (குஜராத்), உத்தரப் பிரதேசத்தில் கோரக்பூர், பிரயாக்ராஜ் மற்றும் லக்னௌ ஆகிய இடங்களில் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விமானங்களில் பவர் பேங்க் பயன்படுத்த தடை: பயணிகளின் பாதுகாப்பு கருதி மத்திய அரசு நடவடிக்கை

**புதுடெல்லி, ஜன.9:**

விமானப் பயணங்களின் போது பவர் பேங்க் போன்ற சார்ஜர் சாதனங்களை பயன்படுத்துவதற்கு இந்திய விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) தடை விதித்துள்ளது.

புதுப்பிக்கப்பட்ட விமானப் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை டிஜிசிஏ வெளியிட்டுள்ளது. அதன் கீழ் இந்த புதிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து டிஜிசிஏ வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: விமானப் பயணிகள் இனி பவர் பேங்குகளை பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள். இதில், விமான இருக்கையின் அருகேயுள்ள மின் பிளக்குகளில் பவர் பேங்கை சொருகி மொபைல்போன், லேப் டாப்பை சார்ஜ் செய்வதும் அடக்கம். பவர் பேங்க்குகள் மற்றும் அதுபோன்ற லித்தியம் பேட்டரிகளை கைப் பைகளில் மட்டுமே எடுத்துச் செல்ல வேண்டும்.

அதனை மேல் பக்க கம்பார்ட்மன்ட்களில் வைக்கக் கூடாது என்று விதிமுறைகளில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. லித்தியம்-அயன் பேட்டரிகளால் ஏற்படும் தீ விபத்துகளை தவிர்க்க இந்த முன்னெச்சரிக்கைநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச விமான நிறுவனங்கள் ஏற்கெனவே இதேபோன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

இவ்வாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது. பயணிகளின் இணக்கத்தை உறுதி செய்வதற்கும், விமானப் பயணத்தின் போது பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும், விமான நிறுவனங்கள் பயணத்துக்கு முந்தைய அறிவிப்பு மற்றும் விமானப் பணியாளர் விளக்கங்கள் மூலம் இந்த புதிய தடையை அமல்படுத்த தொடங்கியுள்ளன.

## பிஎஸ்எல்வி - சி62 ராக்கெட் 12-ந்தேதி விண்ணில் பாய்கிறது

**ஸ்ரீஹரிகோட்டா, ஜன.9:**



இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகமான இஸ்ரோ வருகிற 12-ந்தேதி பிஎஸ்எல்வி - சி 62 ராக்கெட்டை விண்ணில் ஏவ உள்ளது. இதுதொடர்பாக இஸ்ரோ தனது எக்ஸ் தள பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது:-

பிஎஸ்எல்வி-சி62 ராக்கெட்டை வருகிற 12-ந்தேதி காலை 10:17 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி மையத்தின் முதல் ஏவுதளத்தில் இருந்து ஏவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஏவுதலை ஏவுதல் காட்சிக் கூடத்தில் இருந்து பொதுமக்கள் பார்க்க ஆன்லைனில் LVG.SHAR.GOV.IN என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிஎஸ்எல்வி - சி62 ராக்கெட் மூலம் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (டிஆர்டிஓ) உருவாக்கப்பட்ட மேம்பட்ட புவி கண்காணிப்பு-ஹைப்பர் ஸ்பெக்ட்ரல்செயற்கைக்கோளான இ.ஓ.எஸ்-என்1 (அன்வேஷா) விண்ணில் ஏவப்படுகிறது. இது படமெடுக்கும்செயற்கைக்கோள் ஆகும்.

மேலும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஒரு ஸ்டார்ட்அப் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட கெஸ்ட்ரல் இனிஷியல் டெமான்ஸ்ட்ரேட்டர் என்ற சிறிய செயற்கைக்கோள் மற்றும் இந்தியா, மொரீஷியஸ், லக்சம்பர்க், ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஐரோப்பா மற்றும் அமெரிக்கா முழுவதும் உள்ள ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் 17 துணை செயற்கைக்கோள்களும் இந்த ராக்கெட் மூலம் ஏவ திட்டமிடப்பட்டுள்ளது.

## அதிக சொத்து வரி கட்டியதில் ராஷ்மிகா முதலிடம்

**பெங்களூரு, ஜன.9:**

குடகு மாவட்டத்தில், அதிகமான சொத்து வரி செலுத்தியோர் பட்டியலில் நடிகை ராஷ்மிகா மந்தனா முதலிடத்தில் உள்ளார்.

கன்னட திரையுலகில், 'கிரிக் பார்ட்டி' படம் மூலம், நடிகையானவர் ராஷ்மிகா மந்தனா. இவர், குடகு மாவட்டத்தை சேர்ந்தவர். முதல் திரைப்படமே வெற்றி அடைந்ததால், அடுத்தடுத்த படங்களில் வாய்ப்பு கிடைத்தது. அதன்பின், தெலுங்கு திரையுலகில் நுழைந்தார். ஸ்டார் நடிகர்களுடன் நடித்தார்.

தெலுங்கை தொடர்ந்து தமிழிலும் நடித்த ராஷ்மிகா, தற்போது பாலிவுட்டிலும் அடுத்தடுத்த படங்களில் நடித்து வருகிறார். இவர், தன் வருமானத்தை முதலீடு செய்யும் நோக்கில், 2022 ஆகஸ்டில், 'புரொடக்ஷன் எல்எல்பி' என்ற நிறுவனத்தை துவங்கினார். இவர், 2025 - 26 நிதியாண்டில், மிக அதிகமாக சொத்து வரி செலுத்தியுள்ளார். இவர், 4 கோடி ரூபாய்க்கும் அதிகமாக சொத்து வரி செலுத்தியுள்ளார். குடகு மாவட்டத்தில், அதிகமான வரி செலுத்தியவர்கள் பட்டியலில், இவர் முதல் இடத்தில் உள்ளார்.




## சேலத்தில் மருத்துவக் கல்லூரி மாணவி மர்மமான முறையில் உயிரிழப்பு



**சேலம், ஜன.09:** சேலத்தில் நெல்லையைச் சேர்ந்த மருத்துவக்கல்லூரி மாணவி மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் குறித்து இரும்பாலை போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். நெல்லை, வீரவநல்லூர் பகுதியைச் சேர்ந்த வரதராஜனின் மகள் வர்ஷினி (22).

இவர் சேலத்தில் உள்ள தனியார் ஹோமியோபதி கல்லூரியில் 5-ம் ஆண்டு படித்து வந்தார். இவர் சக தோழியுடன் கல்லூரி அருகே வாடகைக்கு அறை எடுத்து தங்கி வந்தார்.

அவருடன் தங்கியிருந்த மாணவி ஊருக்குச் சென்று விட்டு நேற்று காலை அறைக்கு திரும்பியபோது, வர்ஷினி மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்துள்ளார். இதை பார்த்து அதிர்ச்சி அடைந்து இரும்பாலை போலீஸாருக்கு தகவல் தெரிவித்தார்.

போலீஸார் சம்பவ இடம் வந்து, உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் குறித்து இரும்பாலை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.


முதல்கட்ட விசாரணையில், நேற்று முன்தினம் வர்ஷினியின் தந்தை வரதராஜன் மகளை பார்க்க சேலம் வந்து அவருடன் தங்கியிருந்து விட்டு சென்றுள்ளார்.

மேலும், திருமணமான சித்த மருத்துவருடன் வர்ஷினி பழகி வந்துள்ளார். இதுசம்பந்தமாக வர்ஷினிக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தகராறு இருந்து வந்துள்ளது. இந்நிலையில், வர்ஷினி மர்மமான முறையில் உயிரிழந்துள்ளது தெரியவந்துள்ளது.

மாணவி மர்மமான முறையில் இறந்துள்ள நிலையில், அவரது கை நீல நிறமாக மாறியுள்ளதால், அவருக்கு விஷம் கொடுத்து கொலை செய்யப்பட்டாரா அல்லது அவரே விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டாரா என பிரேத பரிசோதனை அறிக்கை மூலம் கண்டறிய போலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து இரும்பாலை போலீஸார் நெல்லையில் உள்ள மாணவியின் உறவினர்களுக்கு தகவல் கொடுத்துள்ளனர். இதுகுறித்து தொடர்ந்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கைதிகள் சென்ற வாகனத்துக்குள் கஞ்சா பொட்டலம் வீசிய 2 பேர் கைது



**சென்னை, ஜன.09:** கைதிகளை ஏற்றிச் சென்ற போலீஸ் வாகனத்துக்குள் கஞ்சா பொட்டலம் வீசிய இருவர் கைது செய்யப்பட்டனர். புழல் சிறையிலிருந்து 15 கைதிகளை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த, போலீஸார் நேற்று முன்தினம் வேனில் அழைத்து வந்தனர்.

நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்து, இரவு 7.30 மணிக்கு புழல் சிறை நோக்கி மீண்டும் புறப்பட்டனர். கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை அருகில் செல்லும்போது, இருசக்கர வாகனத்தில் பின் தொடர்ந்து வந்த 2 பேர் கஞ்சா பொட்டலத்தை வாகனத்துக்குள் வீசினர்.

அதில் போலீஸார் இருந்ததால் 2 பேரையும் பிடித்து, கிண்டி காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். விசாரணையில், பிடிபட்டவர்கள் ராயப்பேட்டை சேர்ந்த ஜோசப் (28), விஜய் (27) என்பது தெரியவந்தது.

இவர்கள் இருவர் மீதும், அடி தடி, வழிப்பறி வழக்குகள் உள்ளன. ஏற்கெனவே சிறையில் இருந்தபோது, சூளைமேடு பகுதியை சேர்ந்த தினேஷ்குமார் என்பவருடன் நட்பு ஏற்பட்டுள்ளது.

அவருக்கு கஞ்சா வழங்க முயன்று வேனில் பொட்டலம் வீசியதாக அவர்கள் போலீஸாரிடம் தெரிவித்துள்ளனர். இதையடுத்து, இருவரையும் போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## பாயாசத்தில் தூக்க மாத்திரை கலந்து கொடுத்து மூதாட்டியிடம் நகை, பணம் திருட்டு




**சென்னை, ஜன.09:** அயனாவரத்தில் மமலாபி (75) என்ற மூதாட்டி தனியாக வசிக்கிறார். இவரது பிள்ளைகள் திருமணமாகி வெளியூர்களில் உள்ளனர். இவர் மேல் தளத்தில் வசிக்கும் நிலையில் வீட்டின் கீழ் தளத்தை பத்ருன்னிஷா பேகம் (50) என்பவருக்கு வாடகைக்கு விட்டுள்ளார்.

கடந்த 15-ம் தேதி, மூதாட்டி மமலாபி வீட்டுக்கு பத்ருன்னிஷா பேகத்தின் 14 வயது மகள் வந்தார். அவர் பாட்டி உங்களுக்கு பாயாசம் செய்து தரவா? எனக் கேட்டுள்ளார்.

நீ ஆசையாக கேட்பதால் கொஞ்சமாக செய்து கொடு என மூதாட்டி தெரிவித்துள்ளார். இதையடுத்து மமலாபி வீட்டிலேயே சிறுமி பாயாசம் செய்து அவருக்கு கொடுத்துள்ளார்.

பாயாசம் பருகிய சிறிது நேரத்தில் மமலாபி மயங்கினார். பின்னர் மறுநாள் காலை எழுந்து பார்த்தபோது, மூதாட்டி கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் எடைகொண்ட 2 செயின்கள் திருடு போனது தெரியவந்தது.

இது தொடர்பாக அவர் அயனாவரம் போலீஸில் புகார் அளித்தார். போலீஸ் விசாரணையில் பத்ருன்னிஷா பேகத்தின் வழிகாட்டுதல்படி அவரது 14 வயது மகள் பாயாசம் செய்து அதில் தூக்க மாத்திரை கலந்து கொடுத்து, நகை மற்றும் ரூ.1.50 லட்சத்தை திருடியது தெரியவந்தது.

இதையடுத்து பத்ருன்னிஷா பேகம், அவரது மகளை போலீஸார் கைது செய்தனர். பத்ருன்னிஷா பேகம் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், அவரது மகள் சிறார் நீதிக் குழுமத்தில் ஆஜர் படுத்தப்பட்டு, அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.



பென்னாகரத்தை அடுத்துள்ள சின்னப்பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மின் சிக்கன வார விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு மின்வாரியம் மூலமாக பள்ளிகளில் செயல்பட்ட வரும் ஆற்றல் மன்றம் மூலமாக மாணவர்களிடையே மின் சிக்கனம், மின்சாதன பொருட்களை கையாள்வதில் கவனமாக இருத்தல்,முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், வற்றும் வளங்கள் மற்றும் வற்றாத வளங்கள் உள்ளிட்டவைகள் பற்றி ஆற்றல் மன்றம் மூலமாக மாணவர்களுக்கு அவ்வப்போது விழிப்புணர்வு உண்டாக்கப்பட்டு வருகிறது. மின்சிக்கன வார விழாவை முன்னிட்டு நடைபெற்ற ஓவிய போட்டியில் பள்ளி அளவில் முதலிடம் பிடித்த ஏழாம் வகுப்பு மாணவி மு. ராகினி இரண்டாம் இடம் பிடித்த எட்டாம் வகுப்பு மாணவி மு. ஜெயாமணி மூன்றாம் இடம் பிடித்த ஆறாம் வகுப்பு மாணவன் சி. சுஜித்குமார் ஆகியோருக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயம் மின்வாரியம் மூலம் வழங்கப்பட்டது. பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர் மா. பழனி மற்றும் ஆசிரியர்கள் வளர்மதி, பழனிச்செல்வி, கல்பனா, கலைச்செல்வி, ராஜேஸ்வரி உள்ளிட்ட கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டுகள் தெரிவித்தார்கள்.

### மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர்., இளைஞரணி செயலாளராக இருந்த,

## முன்னாள் அ.தி.மு.க., பேரூராட்சி கவுன்சிலர் குருராஜ், அ.தி.மு.க.,விலிருந்து விலகி, த.வெ.க.,வில் ஐக்கியமானார்



**சென்னை, ஜன.09:** மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர்., இளைஞரணி செயலாளராக இருந்த, முன்னாள் அ.தி.மு.க., பேரூராட்சி கவுன்சிலர் குருராஜ், அ.தி.மு.க.,விலிருந்து விலகி, த.வெ.க.,வில் ஐக்கியமானார். அந்தியூர் தவிட்டுப்பாளையத்தை சேர்ந்தவர் குருராஜ், 46; முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனின் தீவிர விசுவாசி.செங்கோட்டையனை கட்சி பொறுப்பில் இருந்து நீக்கியபோது, அவருடன் இணைந்து செயல்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், முன்னாள் எம்.எல்.ஏ., ராஜாகிருஷ்ணனுடன் சேர்ந்து, அ.தி.மு.க.,வில் பூத் கமிட்டி உறுப்பினர்களை வலுப்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். அ.தி.மு.க.,விலிருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையன், த.வெ.க., தலைவர் விஜய் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தார். அவருக்கு அக்கட்சியில் நிர்வாக்குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் பொறுப்பு வழங்கப்பட்டது.

எக்காரணம் கொண்டும் அ.தி.மு.க.,விலிருந்து விலக மாட்டேன் எனக் கூறி வந்தவர் குருராஜ். நேற்று, அ.தி.மு.க., விலிருந்து விலகி, கோபிசெட்டிபாளையத்தில் உள்ள அலுவலகத்தில், செங்கோட்டையன் முன்னிலையில் த.வெ.க.,வில் இணைந்தார். இவருடன் 50க்கும் மேற்பட்டோரும் அ.தி.மு.க., விலிருந்து விலகி, த.வெ.க., வில் இணைந்துள்ளனர்.

அந்தியூரை பொறுத்தவரை, அ.தி.மு.க., வில் விரல் விட்டு எண்ணும்படியாக உள்ள நிர்வாகிகளில், குருராஜும் ஒருவராக இருந்தார்.

மேலும், அ.தி.மு.க., வில் சுறுசுறுப்பாக பணியாற்றிவரும் கூட. இவர், 2005ல் அடிப்படை உறுப்பினராக அ.தி.மு.க.,வில் சேர்ந்தார். 201116 வரை, அந்தியூர் பேரூராட்சி கவுன்சிலராக இருந்தார். 2015ல் மாவட்ட ஐ.டி., விங்க் இணை செயலாளராகவும், 202022 வரை, ஒன்றிய பாசறை செயலாளராகவும், 202225 செப்டம்பர் வரை, மேற்கு மாவட்ட மாணவரணி செயலாளராகவும், 2025 செப்டம்பரிலிருந்து மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர்., இளைஞரணி செயலாளராகவும் இருந்தார்.

இதுகுறித்து, த.வெ.க., வில் இணைந்து குருராஜ் கூறியதாவது; அ.தி.மு.க.,வில் எவ்வளவு உழைத்தாலும், ஒரு சாரார் மட்டும் பயனடைகின்றனர். அவர்களை தவிர, வேறு யாரையும் முன்னேற விடுவதில்லை. அதன் காரணமாகவே, அக்கட்சியிலிருந்து விலகி, த.வெ.க.,வில் இணைந்தேன். இவ்வாறு அவர் கூறினார். இவரது மனைவி கலைச்செல்வி, அ.தி.மு.க., சார்பில் போட்டியிட்டு, அந்தியூர் பேரூராட்சியில் 13வது வார்டு கவுன்சிலராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


## குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு



கீழ்பென்னாத்தூர் தொகுதி சோமாசிப்பாடி ஊராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் பொங்கல் பரிசாக ரூ. 3000/- ரொக்கம் மற்றும் அரிசி, சக்கரை,கரும்பு, வேட்டி சேலை ஆகியவற்றை வழங்கினார். மற்றும் ஆரஞ்சி ஆறுமுகம்,கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்.




சோனாலிகா ஆரோக்கியம் திட்டத்தின் மூலம் 120 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் வழங்கும் விழா சக்கிமங்கலம் மருத்துவ அலுவலர் சாந்தகுமார் மற்றும் எல்.கே.பி நகர் பள்ளி தலைமைஆசிரியர் தென்னவன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஊட்டச்சத்து பெட்டகங்களை தாய்மார்களுக்கு வழங்கினார்கள். இந்த திட்டமானது ஏகம் அறக்கட்டளை மூலம் சக்கிமங்கலம் சமுதாயக்கூடத்தில் நடைபெற்றது.



திருமோகூர் காளமேகப் பெருமாள் இராப்பத்து உத்ஸவம் ஒன்பதாம் திருநாள்.



வித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில், இராஜமன்னார்குடி. திருஅத்யயன உத்ஸவ இராப்பத்து ஒன்பதாம் திருநாள் ஸ்ரீ பெருமாள் மோஹினி திருக்கோலம் புறப்பாடு, பரமபதவாசல் திறப்பு, திருக்கொட்டகை ப்ரவேஸம், ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சாரியார்கள் மங்களாஸாசனம், ஆயிரம் கால் மண்டபத்தில் படியேற்றம் கண்டருளல். நாச்சியார் திருக்கோலம் வருடத்தில் ஒருமுறை !

## தமிழக அரசின் பொங்கல் பொருட்கள் திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் வழங்கினார்





சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் நெல்முடிகரை கூட்டுறவு சங்கத்திற்கு உட்பட்ட கடை எண் 1. 2 திருப்புவனம் உழவர் பணி கூட்டுறவு சங்கத்திற்கு உட்பட்ட கடை எண். கோட்டை1.2 மெயின்1.2.3. புதூர் 1.2 ஆகிய நியாய விலை கடைகளில் உள்ள குடும்ப அட்டை தாரர்களுக்கு தமிழக அரசின் பொங்கல் தொகுப்பு பொருட்களையும் ரூபாய் 3.000 த்தையும் திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன் வழங்கினார் நிகழ்ச்சியில் வட்டாட்சியர் பூபாலன் கூட்டுறவு பொது விநயோக திட்ட சார்பதிவாளர் வித்தியா. கள ஆய்வு சார் பதிவாளர். யோகேஸ்வரன். பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். சங்க செயலாளர்கள். ரமேஷ்.துரை. பேரூராட்சி கவுன்சிலர்கள் கண்ணன். வேல்பாண்டி. மாரிதாசன். பாலகிருஷ்ணன். சித்ராதேவி ஆறுமுகம். ராமலட்சுமி பாலகிருஷ்ணன். கமிதாபானு சேக் முகமது. மாவட்ட பிரதிநிதி ஈஸ்வரன் சுப்பையா. நகர துணைச் செயலாளர் மீனாட்சிசுந்தரம். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அறிவுகரசு. ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வாராஹி சிறப்பு வழிபாடு.....



செங்கல்பட்டு மாவட்டம் ஜனவரி- 8 மதுராந்தகத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ தன ஆகர்ஷண வாராஹி தேய்பிறை பஞ்சமி திதியை முன்னிட்டு சந்தான பாக்கியம் அருளும் சந்தன காப்பு அலங்காரத்தில் மதுராந்தகத்தின் சக்கரவர்த்தினியான ஸ்ரீ தன ஆகர்ஷண வாராஹி அம்பாள் இன்றைய சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி.



மதுரை கூடலழகர் இராப்பத்து உத்ஸவம் ஒன்பதாம் திருநாள் - ரத்னாங்கி சேவை.



மதுரை ஸ்ரீ வீரராகவ பெருமாள் இராப்பத்து உத்ஸவம் ஒன்பதாம் திருநாள் - ஸ்ரீ நாச்சியார் திருக்கோலம்.

## ராமேசுவரம் - தாம்பரம் சிறப்பு ரெயிலில் கூடுதல் பெட்டிகள் இணைப்பு

**திருச்சி, ஜன.09:** ராமேஸ்வரம்-தாம்பரம் மற்றும் தாம்பரம்-ராமேஸ்வரம் இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது.

இந்த சிறப்பு ரெயில்களில் (06105/06106) கூடுதலாக 2 பொது இரண்டாம் வகுப்பு பெட்டிகள் வருகிற 13-ந்தேதி மற்றும் 14-ந்தேதி இணைக்கப்பட்டு இருக்கும்.

மேலும் இந்த ரெயிலில் திருத்தப்பட்ட பெட்டி அமைப்பில் 3 ஏசி மூன்றடுக்கு பெட்டிகள், 6 படுக்கை வசதி கொண்ட பெட்டிகள், 6 பொது இரண்டாம் வகுப்பு பெட்டிகள், மாற்றுத்திறனாளிகளுக்கு வசதியான 1 இரண்டாம் வகுப்பு பெட்டி மற்றும் 1 லக்கேஜ் பெட்டி ஆகியவை இணைக்கப்பட்டு இருக்கும். இந்த தகவலை திருச்சி கோட்ட ரெயில்வே மக்கள் தொடர்பு அதிகாரி வினோத் தெரிவித்து உள்ளார்.

# மடையப்பட்டு ஊராட்சியில் திராவிடப் பொங்கல் விழா!




**வேலூர், ஜன. 9:** திமுக தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சருமான தங்கதளபதி மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, வேலூர் தெற்கு மாவட்டம், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, மேற்கு ஒன்றியம் சார்பில் திராவிடப் பொங்கல் விழா மற்றும் புடவை, வேட்டிகள் வழங்கும் நிகழ்ச்சி மடையப்பட்டு ஊராட்சியில் நடைபெற்றது.

இதில் திமுக வேலூர் தெற்கு மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஏ. பி. நந்தகுமார் கலந்து கொண்டு பானையில் பொங்கல் வைத்து சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு புடவை, வேட்டிகள், பொங்கல் தொகுப்பு ஆகியவற்றை வழங்கினார்.

இந்த எளிய நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, பேரூராட்சி செயலாளர் ஆர்.பெருமாள் ராஜா, ஒன்றிய கவுன்சிலர்கள் ஆர்.சாரதி, கணபதி, ஊராட்சி மன்ற தலைவர் கவிதா மதுகுமார், கிருஷ்ணமூர்த்தி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், திமுக நிர்வாகிகள், தொண்டர்கள், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

### அரசு பள்ளி மாணவர்களிடையே

# சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 2 நாள் முகாம்

### 50 பள்ளி மாணவர்களை ஆட்சியர் வழியனுப்பி வைத்தார்




**பெரம்பலூர், ஜன.09:** தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, பள்ளிக் கல்வித் துறை இணைந்து, அரசு பள்ளி மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 2 நாள் திருச்சி முகாம் செல்ல உள்ள 50 அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் செல்லும் போருந்துக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மிருணாளினி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை, பள்ளிக் கல்வித்துறை, பெரம்பலூர் இணைந்து, அரசு பள்ளி மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக 2 நாள் இயற்கை முகாம் திருச்சி 8 மற்றும் 9 ஜனவரி ஆகிய நாட்களில் நடைபெறுகிறது.

இதில் 10 அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து 50 மாணவர்களுடன் 10 பொறுப்பாசிரியர்கள் கலந்து கொண்டு, திருச்சிராப்பள்ளியில் உள்ள பறவைகள் பூங்கா, முக்கொம்பு வண்ணத்துப்பூச்சி பூங்கா மற்றும் கல்லணை ஆகிய இடங்களை பார்வையிட உள்ளார்கள். இந்நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன் மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் உள்ளனர்.



வாணியர் சங்க மாவட்ட தலைவர் கம்பம் எம்எல்ஏ சந்திப்பு தேனி மாவட்டம் கம்பத்தில் தேனி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் கம்பம் என் இராமகிருஷ்ணன் அவர்களை தென்னிந்திய வாணியர் சங்க மாநிலத் துணைத் தலைவரும் வாணியர் சங்க தேனி மாவட்ட தலைவருமான ஆர் சுந்தரவடிவேல் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார் மனு விபரம் தமிழக எல்லையான குமுளியில் புதியதாக திறக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்திற்கு கண்ணகி பெயர் சூட்ட வேண்டும் சிதில மடைந்து உள்ள கண்ணகி கோவிலை சீரமைத்து கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் வருடம் தோறும் நடைபெறும் சித்திரை முழு நிலவு நாளில் மூன்று நாள் கோவில் திறந்து பக்தர்கள் அனுமதித்து தரிசனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் கண்ணகி கோவிலில் கண்ணகி கோட்டம் அமைக்க வேண்டும் தமிழகத்தில் மாபெரும் சக்தியான வாணியர் சமூகத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளதை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் மனுவில் கூறப்பட்டிருந்தது. மனுவை பெற்றுக் கொண்ட எம்எல்ஏ இது குறித்து சட்டமன்றத்தில் பேசி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.உடன் கம்பம் வடக்கு வட்ட வாணியர் சங்கத் தலைவர் ஜெயபாலன் செயலாளர் முத்துப்பாண்டி பொருளாளர் குணசேகரன் வாணியர் சங்க மாவட்ட செயலாளர் கனகராஜ் அறங்காவலர் முருகேசன் உள்பட பலர் உடன் இருந்தனர்.




## தை பிறந்தால் வழிபிறக்கும்- ஓ.பன்னீர்செல்வம் நம்பிக்கை




**சென்னை, ஜன.09:** அ.தி.மு.க. கூட்டணி உறுதியாகி வருகிறது. டி.டி.வி. தினகரனும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையலாம் என்ற தகவல் வெளியாகி உள்ளது. அப்படியானால் ஓ.பன்னீர்செல்வம் எந்த அணியில் இடம் பெறுவார் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இன்று ஓ.பன்னீர்செல்வத்திடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினார்கள். அதற்கு அவர் கூறியதாவது:- ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன். 'தை பிறந்தால் வழி பிறக்கும்.' அதுவரை தயவு செய்து பொறுமையாக இருங்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## எழும்பூர் ரெயில் நிலையத்திற்கு 'காமராஜர்' பெயர் - ஜி.கே.வாசன் கடிதத்தை பெற்றுக்கொண்ட அமித் ஷா




**சென்னை, ஜன.09:** ஆங்கிலேயர் ஆட்சியின்போது கடந்த 1905-ம் ஆண்டில் கட்டப்பட்ட எழும்பூர் ரயில் நிலையம், 121 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. எழும்பூர் ரெயில் நிலைய கட்டிடம் கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தொன்மை வாய்ந்ததாகும். 144 ஆண்டுகள் கடந்தும் இந்த கட்டிடம் பழமை மாறாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த ரெயில் நிலையத்தில் நாள்தோறும் லட்சக்கணக்கான பயணிகள் வந்து செல்கின்றனர்.

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் ரூ.734.91 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு பணிகள் கடந்த 2022-ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. மறு சீரமைப்பு பணியில் ரெயில் நிலையத்தின் பிரதான நுழைவு வாயில் காந்தி இர்வீன் சாலையிலும் பின்புற நுழைவு வாயில் பூந்தமல்லி நெடுஞ்சாலையிலும் அமைக்கப்பட உள்ளது. இரு பகுதியிலும் விரிவாக்கம் மற்றும் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. 1 லட்சத்து 35 ஆயிரத்து 406 சதுர மீட்டர் பரப்பளவில் புதிய ரெயில் நிலைய கட்டிடம் அமைய உள்ளது. பிரதான நுழைவு வாயில், பின்புற நுழைவு வாயில் ஆகிய இரு பகுதியிலும் 3 மாடி கட்டிடங்கள் கட்டப்பட உள்ளன.

பயணிகள் வருகை, புறப்பாடுக்கான பொது தளம், அடுக்குமாடி வாகன காப்பகங்கள், பார்சல்களை கையாள பிரத்யேக பகுதி, அனைத்து நடைமேடைக்கும் (பிளாட்பார்ம்) எளிதாக செல்லும் வசதி, பயணிகள் ரெயிலில் இருந்து இறங்கும் நடைமேடையில் இருந்து மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு செல்லும் வசதி என அனைத்து வசதிகளும் அமைக்கப்பட உள்ளன.

தற்போதுள்ள கட்டிடமும் புனரமைப்பு செய்யப்பட உள்ளது. பயணிகள் காத்திருப்பு பகுதியில் இருந்து நடைமேடைகளுக்கு செல்ல லிப்ட், எஸ்கலேட்டர் ஆகிய வசதிகளும் அமைய இருக்கின்றன. எழும்பூர் ரெயில் நிலையத்தில் மறுசீரமைப்பு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், எழும்பூர் ரெயில் நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரை சூட்ட வேண்டும் என கோரிக்கை எழுந்து வருகிறது. அந்த வகையில், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜி.கே.வாசன், எழும்பூர் ரெயில் நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரை சூட்ட வேண்டும் என உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு கடிதம் எழுதி இருந்தார். இதனையடுத்து, ஜி.கே.வாசன் எழுதிய கடிதத்தை பெற்றுக்கொண்டதாக உள்துறை அமைச்சர் அமித் ஷா பதில் கொடுத்துள்ளார்.

சென்ட்ரல் ரெயில் நிலையத்திற்கு டாக்டர் எம்.ஜி.ஆர். ரெயில் நிலையம் என அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பெயர் சூட்டப்பட்டது நினைவு கூரத்தக்கது.

## நாளை தே.மு.தி.க. மக்கள் உரிமை மீட்பு மாநாடு- கூட்டணி குறித்து முக்கிய அறிவிப்பை பிரேமலதா வெளியிடுகிறார்



**வேப்பூர், ஜன.09:** கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே உள்ள பாசார் கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலையில் தே.மு.தி.க.வின் மக்கள் உரிமை மீட்பு மாநாடு 2.0 நாளை (வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டிற்கு கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமை தாங்கி, சிறப்புரையாற்றுகிறார். சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் வேளையில் நடக்கும், இந்த மாநாட்டில் தே.மு.தி.க. கூட்டணி குறித்து அறிவிக்க வாய்ப்பு உள்ளதால், இந்த மாநாடு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

மாநாட்டிற்காக கடந்த டிசம்பர் மாதம் பந்தக்கால் நடப்பட்டு, அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக சுமார் 150 ஏக்கரில் மாநாட்டு பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது மாநாட்டு திடலில் மேடை அமைக்கும் பணி, சாலையின் இருபுறமும் கட்சி தோரணங்கள், பதாகைகள் வைக்கும் பணியில் நிர்வாகிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதனால் பாசார் பகுதியே விழாக்கோலம் பூண்டுள்ளது. மேலும் நிகழ்ச்சியில் பிற்பகல் 2.30 மணிக்கு பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் மாநாட்டு திடலில் கட்சி கொடியை ஏற்றி வைக்கிறார். தொடர்ந்து 3.23 மணிக்கு பரதநாட்டியம், கேப்டனை பற்றிய கதை, 3.40 மணிக்கு பட்டிமன்றம், மாலை 4.40 மணிக்கு கலைக்குழுவினரின் நடனம், பரத நாட்டிய குழுவினரின் நிகழ்ச்சி, கிராமிய கலைக்குழு நிகழ்ச்சி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடக்கிறது.

இந்த நிலையில் மேடை அமைக்கும் பணியை நேற்று கட்சியின் பொருளாளர் எல்.கே.சுதீஷ் பார்வையிட்டார். அப்போது தலைமை ஒருங்கிணைப்பாளர் பார்த்தசாரதி, மாவட்ட செயலாளர்கள் சிவக்கொழுந்து, உமாநாத் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com